වාර්ෂික වාර්තාව

வருடாந்த அறிக்கை

ANNUAL REPORT

2022

ආබාධ සහිත තැනැත්තන් සඳහා වූ ජාතික මහ ලේකම් කාර්යාලය

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

NATIONAL SECRETARIAT FOR PERSONS WITH DISABILITIES

කාන්තා, ළමා කටයුතු හා සමාජ සවිබලගැන්වීම් අමාත්‍යාංශය
MINISTRY OF WOMEN, CHILD AFFAIRS & SOCIAL EMPOWERMENT
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு

உள்ளடக்கம்

உள்ளடக்கம் 01

முன்னுரை 02

நிறைவேற்று அறிக்கை 03

அறிமுகம் 04

தொலைநோக்கு மற்றும் பணிக்கூற்று 05

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கட்டமைப்பு 06

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிறுவனம்சார் கட்டமைப்பு 07

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின்
தவிசாளரின் அறிக்கை 08

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
பணிப்பாளர் அவர்களின் அறிக்கை 09

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள் 17

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
காசுப் பாய்யச்சல் கூற்று 22

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிதி நிலவரக் கூற்று 23

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய
செயலகத்தின் நிதிசார் செயல்திறன் கூற்று 25

2022 டிசம்பர் 31 நிறைவடைந்த ஆண்டின் நிதிசார் கூற்றுக் குறிப்புகள் 26

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின்
நிதிநிலை கூற்றுக்கான குறிப்புக்கள் 28

2022 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுக்களுக்கான நாளேட்டுப் குறிப்புக்கள் 29

கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை 31

கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை தொடர்பான பதில்கள்..... 40

முன்னுரை

இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களினையும், தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்கும் தொலைநோக்குடன் 1996 ஆம் ஆண்டின் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்காக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல், மீள்விருத்தி செய்தல், பாதுகாத்தல் மற்றும் அது தொடர்பிலான அல்லது துணை விடயங்கள் தொடர்பிலான ஏற்பாடுகளினைச் செய்தல், வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு, அபிவிருத்திச் செயற்பாடுகளினை அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துதல் பிரதான கடமைப் பொறுப்புக்களாகும்.

2022 ஆம் ஆண்டின் சகல அங்கவீனமுற்ற சமுதாயத்தின் நலன்புரி, உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் பாதுகாத்தல் தொடர்பில் அமுலாக்கப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்களின் செயற்திறனினை, இலங்கை ஜனாநயகச் சோசலிசக் குடியரசின் அதிமேதகு பாராளுமன்ற உறுப்பினர்களுக்கு முன்வைத்தல் 2022 ஆம் ஆண்டின் வருடாந்த அறிக்கையின் அடிப்படை நோக்கமாகும்.

நிறைவேற்று அறிக்கை

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினூடாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்காக 2022 ஆம் ஆண்டில் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிலவிய தொற்றுநோய் சூழ்நிலை, பொருளாதார நெருக்கடி அதேபோல எரிபொருள் நெருக்கடியின் காரணமாக இந்நிகழ்ச்சித் திட்டங்களினை அமுலாக்கும்போது சிரமங்களுக்கு முகங்கொடுத்தபோதிலும் 2022 ஆம் ஆண்டு தொடர்பில் திட்டமிடப்பட்டுள்ள நிகழ்ச்சித் திட்டங்களில் அடையப் பெற்ற பௌதிக மற்றும் நிதிசார் முன்னேற்றம் 99.99% ஆகும்.

அங்கவீனமுற்ற சமுதாயத்தின் நலன்புரி மற்றும் உரிமைகளினை மேம்படுத்துவதை அடிப்படையாகக் கொண்டு அமுலாக்கப்பட்டுவரும் நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களுக்கிடையே, நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியினைக் காரணமாகக் கொண்டு வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கும் மற்றும் சிறுநீரக நோயாளர்களுக்கு வழங்கப்படும் வாழ்வாதார நிகழ்ச்சித் திட்டத்திற்கும் அதிஉன்னதமான இடமொன்று உரித்தாக்கப்பட்டுள்ளது. உலக வங்கி மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கி உதவிவுடன் 06 மாதங்களுக்கு ரூபா. ஐயாயிரம் வழமையான கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா இரண்டாயிரத்து ஐந்நூறு மேலதிகக் கொடுப்பனவொன்று மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. ஐயாயிரம் கொடுப்பனவொன்றினை வழங்குவது இடம்பெற்றுள்ளது. இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இலங்கை பூராவுமுள்ள குறைந்த வருமானப் பயனாளிகளான 98369 அங்கவீனமுற்ற நபர்களுக்கும் மற்றும் குறைந்த வருமானப் பயனாளிகளான 63428 சிறுநீரக நோயாளர்களுக்கும் பயன்களினை வழங்கும் இயலுமை கிடைத்துள்ளது. நாட்டில் காணப்பட்ட இக்கட்டான சூழ்நிலையிலும் கூட இச்சவாலினை வெற்றி கொள்ளுவதற்கு எமக்கு முடிந்துள்ளது.

இம் மகத்தான பணியினை வெற்றிகொள்ளுவதற்கு மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சரினதும் மற்றும் கௌரவ இராஜாங்க அமைச்சரினதும் வழிகாட்டல் அதேபோல அமைச்சின் பணியாட்தொகுதியினரின் ஒத்துழைப்பும் மிகவும் பாராட்டப்பட்ட வேண்டிய விடயமாகும்.

அதேபோல மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சின் செயலாளரின் ஆலோசனைகள், வழிகாட்டல்கள், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் பணியாட்தொகுதி, சமுர்த்தி அபிவிருத்தி திணைக்களத்தின் பணியாட்தொகுதி, மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள், பிரதேச செயலகத் தொகுதிகளிலும் மற்றும் மாவட்டச் செயலகங்களிலும் விடயம் தொடர்பில் கடமைகளினை நிறைவேற்றும் சகல சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினை உள்ளடக்கி ஒட்டு மொத்தச் செயற்பாடுகளிலும் பங்களிப்பு வழங்கிய சகல உத்தியோகத்தர்ளுக்கும் விசேட நன்றிகள் உரித்தாக்கப்படுதல் வேண்டும்.

அறிமுகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்திற்கான ஏற்பாடுகளினைச் செய்வதற்கு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை மற்றும் தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம்,. அங்கவீனமுற்ற நபர்களுக்கு சிநேகபூர்வமான சூழலொன்றினை உருவாக்குவதற்கும், அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல் மற்றும் அவர்களின் நலன்புரி உட்பட நிவாரணங்கள் வழங்கும் நோக்குடனும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் அமுலாக்கப்பட்டுவருகிறது.

2022 ஆம் ஆண்டில் அங்கவீனமுற்ற நபர்களுக்காக இடம்பெற்றுவரும் சட்டம்சார் சேவைகள், நலன்புரி, புனர்வாழ்வு, வலுவூட்டுவதற்காகப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்பட்டுள்ளன. தற்போதைய சமூக முறைமைக்கு இணங்கும் முகமாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கு ஆகக்கூடிய நீதியினை உறுதிசெய்வதற்கு 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தினை மீளவும் திருத்துதல், சைகை மொழி சட்ட வரைவுகளினை உருவாக்குதல், சர்வதேச மட்டத் தரநிலைகள் மற்றும் விவரக் குறிப்புக்களின் பிரகாரம் பிரவேசிப்பு (அணுகல்) கட்டளைகளுக்கு அமைவாகவுள்ள வர்த்தமானியினை உருவாக்குதல், அதேபோல குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகள், சிறுநீரக நோய் உதவிக் கொடுப்பனவுகள், மருத்துவ உதவிகள், கல்வி உதவிகள், உதவிசார் உபகரணங்கள், வீடமைப்பு உதவிகள், சுயதொழில் உதவிகளினை வழங்குதல் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களினை பிரத்தியேகத் துறையில் பணிக்கமர்த்துதல், திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டங்கள், விழிப்புணர்வூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் போன்ற பல நிகழ்ச்சித் திட்டங்கள் அமுலாக்கப்படுகின்றன.

அதனூடாக அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டுவதனூடாக சார்பு மனநிலையிலிருந்து விடுவித்து அவர்களினை நாட்டின் வளங்களாக உருவாக்கி, மொத்தத் தேசிய உற்பத்தியில் பங்குதாரர்களாக்கி, சமூகத்தின் கீழ்த்தரமான உளப்பாங்கின் பாரம்பரியக் கட்டமைப்பிலிருந்து விலகுவதற்கு வாய்ப்பினை வழங்கி, அவர்களுக்குப் பெருமையான வாழ்க்கைத் தரத்தினை உருவாக்குதல் எமது இறுதி அவாவாகும்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகள் சட்டத்தின் சட்ட விதிகளுக்கு அமைவாக

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் அமைக்கப்பட்டுள்ளது.


தொலைநோக்கு

இலங்கையில் அங்கவீனமுற்ற நபர்களினையும் தேசிய அபிவிருத்தியின் பங்குதாரர்களாக்குதல்.


பணிக்கூற்று

வழிகாட்டுதல், ஒருங்கிணைப்பு, மேம்பாட்டுச் செயற்பாடுகளினை அமுலாக்குதல் மற்றும் செயற்படுத்துவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை ஊக்குவித்தல், மேம்படுத்துதல் மற்றும் பாதுகாப்பினை உறுதிப்படுத்தல்,

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கட்டமைப்பு



அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நிறுவனம்சார் கட்டமைப்பு



அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் தவிசாளரின் அறிக்கை

அங்கவீனமுற்ற நபர்கள், பெரும்பாலும் ஆதரவற்றவர்களாக அல்லது உதவி கிடைக்க வேண்டிய பிரிவினராக சமூகமயமாக்கப்படுகின்றனர். இந்த எதிர்மறையான மாதிரியில் மாட்டிக் கொண்டு சார்பு நிலையில் வாழும் இச் சமூகம், உடல் ரீதியாகவும் உள ரீதியாகவும் சமூகத்தின் அங்கமாக இருப்பதற்கு முயன்று வருவது புலனாகிறது. தன்னம்பிக்கையுடன் எழுவதற்கு, திறமைகளினை வளர்த்துக் கொள்ளுவதற்கு முயற்சியெடுக்காது, அரசின் நலன்புரி உதவிகளின் கீழ், சார்ந்திருப்பதற்கு அனுதாபத்தினைப் பெறும் செயலற்ற வாழ்க்கைக்கு பழகிவிட்டனர். இந் நிலைமை குடும்பம், சமூகம் மற்றும் நாட்டின் பொருளாதார மற்றும் சமூகக் காரணிகளில் எதிர்மறையான விளைவினை ஏற்படுத்துகிறது. இம்மனப்பானமையிலிருந்தும், வடிவங்களிலிருந்தும் அவர்களினை விடுவித்து, சமூகத்தின் பெருமைக்குரிய பங்குதாரர்களாக மாற்றும் பொறுப்பு எமது அமைச்சிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை ஊக்குவித்தல், பாதுகாத்தல் மற்றும் உறுதிப்படுத்துவதற்கு 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்கச் சட்டத்தின் கீழ் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையொன்று, இவ்வமைச்சில் அமைக்கப்பட்டுள்ளது. இச்சட்டத்தின் மூலம் கிடைக்கப் பெற்ற அதிகாரத்தின் பிரகாரம், அங்கவீனமுற்ற நபர்களுக்கான இத்தேசிய சபையினால் எடுக்கப்படும் தீர்மானங்களினை அமுலாக்குவதற்கு நிறுவப்பட்டுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினூடாக நலன்புரி, அங்கவீனம் ஏற்படுவதற்கான பிரதான காரணங்களினைத் தடுத்தல், கட்டுப்படுத்துதல், புள்ளிவிவரங்களினை முன்னெடுத்துச் செல்லுதல், புனர்வாழ்வளித்தல், அங்கவீனமுற்ற நபர்களுக்காக நிறுவப்பட்டுள்ள நிறுவனங்களின் செயற்பாடுகளினை செயலாக்குதல், ஆலோசனைகள் வழங்குதல், உதவிகள் வழங்குதல் மற்றும் பௌதிகச் சூழலினைப் பொருந்தக்கூடியவாறு அமைப்பதற்கான நிகழ்ச்சித் திட்டங்கள், கொள்கைகளினை வகுத்தல் மற்றும் வழிகாட்டல்களினை வழங்குதல் போன்ற துணை விடயங்களினை அடையப் பெறுவதற்குப் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்களினை ஒருங்கிணைத்து அமுலாக்குவதுடன், இந்நிகழ்ச்சித் திட்டங்கள், அங்கவீனமுற்ற சமுதாயத்தினை ஒரு புதிய திசையில் இட்டுச் செல்லும் வகையில் அமைக்கப்பட்டுள்ளன.

இப்பொறுப்பினை நிறைவேற்றுவதில் முக்கிய பங்கினை வகிக்கும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் உட்பட பணியாட் தொகுதியினர் அர்ப்பணிப்புடன் முன்னெடுக்கும் சேவை பாராட்டப்படுதல் வேண்டும் என்பதுடன். இப்பணிகள் தொடர்பில் தனியார் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்கள், தங்கள் நேரத்தினையும் உழைப்பினையும் செலவு செய்து, அங்கவீனமுற்ற சமுதாயத்தின் முன்னேற்றத்திற்காக ஆற்றிவரும் பணிகளினை பாராட்டுவதுடன், இவர்கள் அனைவருக்கும் எனது நன்றியினைத் தெரிவித்துக் கொள்கின்றேன்.

அனுப பஸ்குவல்,
சமூக வலுவூட்டல் இராஜாங்க அமைச்சர்,
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு.

தவிசாளர்,
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபை.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் பணிப்பாளர் அவர்களின் அறிக்கை

அரசின் கொள்கைகள், தீர்மானங்களுக்கமைவாக, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் கொள்கைசார் தீர்மானம் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட நடவடிக்கைகளின் பிரகாரம் பணி புரிந்து, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் 2022 ஆம் ஆண்டில் சுவீகரித்துக் கொள்ளப்பட்ட செயற்திறன் தொடர்பிலான தகவல்கள் கீழே காட்டப்பட்டுள்ளன. இந்த ஆண்டில் நாட்டில் நிலவிய தொற்றுநோய் நிலைமை, பொருளாதார நெருக்கடி மற்றும் எரிபொருள் நெருக்கடி போன்ற சவால் நிறைந்த சூழ்நிலைகளிலும்கூட மிகச் சிறந்த செயற்திறனினை அடைய முடிந்துள்ளது.

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் புதிய சட்டவரைவு

இச்சட்டம் தற்போதைய சமூக முறைமைக்கு ஒத்தாக அங்கவீனமுற்ற சமுதாயத்திற்கென ஆகக்கூடிய நியாயத்தினைப்பெற்றுக் கொடுப்பதற்கு மீளவும் திருத்தும் செயற்பாடுகளினை முன்னெடுத்து புதிய சட்டவரைவு, சட்டவரைஞர் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

சைகை மொழிற் சட்டவரைவு

சைகை மொழியினை அங்கீகரிக்கப்பட்ட தொடர்பாடல் ஊடகமொன்றாக அமைப்பதற்கு அமைச்சின் அவதானிப்புக்கு இணங்க சட்டவரைஞர் திணைக்களத்தினூடாக தயாரிக்கப்பட்ட சைகை மொழிச் சட்ட வரைவு நீதியரசர் திணைக்களத்தின் அனுமதிச் சான்றிதழினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி

அரச கட்டிடங்கள், பிரசித்திபெற்ற இடங்கள் மற்றும் சேவைகளினைக் கொண்ட இடங்களினை, அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடிய முறையில் அமைப்பதற்காக **2006.10.17** ஆந் திகதிய **1467/15** என்ற இலக்க அதிவிசேட வர்த்தமானி அறிவித்தல் மற்றும் அதனைத் திருத்தி வெளியிடப்பட்டுள்ள **1619/24** என்ற இலக்க மற்றும் **2009.09.18** ஆந் திகதிய அதி விசேட வர்த்தமானி அறிவித்தல் தற்போது காணப்படும் நிலைமைக்குப் பொருந்தும் வகையில் மீளவும் தயாரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. உரிய துறை தொடர்பில் நிபுணத்துவத்தினைக் கொண்ட குழுவினூடாக திருத்தம் இடம்பெற்று வருகிறது.

03 பாதுகாப்பு நிலையங்களினை அமைத்தல்

நாடுபூராவும் 6 பாதுகாப்பு நிலையங்களினை நிர்மாணிப்பதற்கு அமைப/18/0755/711/015 என்ற இலக்க பத்திரத்தினூடாக அமைச்சரவை அங்கீகாரம் கிடைக்கப் பெற்றுள்ளது.

இதுவரையில், கம்பகா - மீரிகம, மாத்தளை – தம்புள்ள என்றவாறு காணிகளினை இனங்கண்டு ஒப்படைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. மாத்தறை அக்குரஸ்ஸ நிலையத்தின் நிர்மாணிப்புச் செயற்பாடுகள் இறுதிக்கட்டதிற்கு வந்துள்ளது.

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5,000/- மாதாந்த வாழ்வாதார உதவிக் கொடுப்பனவினை வழங்குதல்.

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்தும் நோக்குடன் 2007 ஆம் ஆண்டு தொடக்கம் நடைமுறைப்படுத்தப்பட்ட இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் அவர்களின் குடும்பங்களினை வலுவூட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்படுகிறது. வாழ்க்கைத் தரத்தினை உயர்த்துதல், ஊட்டச்சத்தினை உயர்த்துதல், உள மற்றும் சமூக நிலையினை மேம்படுத்துதல் இதில் அடையாளம் காண முடியும். 2007 ஆம் ஆண்டு தொடக்கம் வழங்கப்பட்டுள்ள ரூபா. 3000/- வாழ்வாதார உதவி, 2019 ஆம் ஆண்டின் மே மாதம் தொடக்கம் ரூபா. 5,000/- வரை அதிகரிக்கப்பட்டு, 2019 யூலை மாதம் தொடக்கம் 32,000 பயனாளிகள் எண்ணிக்கைக்கு மேலும் 40,000 புதிய பயனாளிகளினை ஒன்றுசேர்த்து மொத்தமாக 72,000 வரை அதிகரிப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. 2022 மே, யூன், யூலை மாதங்களுக்கு உலக வங்கி செயற்திட்டத்தின் கீழ் வாழ்வாதார உதவியினைப் பெறும் அங்கவீனமுற்ற நபர்களுக்கு ரூபா. 5000/- வழமையான கொடுப்பனவுக்கு மேலதிகமாக ரூபா. 2500/- மேலதிகக் கொடுப்பனவு மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக செப்ரெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் 03 மாதங்கள் தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உலக வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் மற்றும் ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக 06 மாதங்களுக்கு பின்வருமாறு கொடுப்பனவுச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன.

உரிய மாதம்	ரூ. 5000/- வழமையான கொடுப்பனவு தொடர்பில்		ரூபா. 2500/- மேலதிகக் கொடுப்பனவு தொடர்பில் **(top up)**		காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவு தொடர்பில்	
	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.
2022 மே	**71882**	**359.4**	**23837**	**59.6**	**25327**	**126.63**
2022யூன்	**71268**	**356.3**	**20920**	**52.3**	**25072**	**125.36**
2022யூலை	**71151**	**355.8**	**20474**	**51.2**	**25072**	**125.36**
மொத்தம்		**1071.5**		**163.1**		**377.35**
2022 செப்.	**70705**	**353.3**	**17065**	**42.6**	**12809**	**63.8**
2022 ஒக்.	**70704**	**353.4**	**16960**	**42.3**	**13041**	**64.8**
2022 நவம்.	**70340**	**353.5**	**16714**	**41.8**	**12905**	**64.3**
மொத்தம்		**1060.2**		**126.7**		**192.9**

விக்டோரியா இல்லத்தினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு உதவிகளினை வழங்குதல்.

சுமார் **147** படுக்கையிலுள்ள நோயாளர்கள் தொடர்பில் சேவைகளினை வழங்கும் இராஜகிரிய விக்டோரியா இல்லத்தின் ஊழியர் சம்பளம் மற்றும் கொடுப்பனவுகள், நீர், மின்சாரம் மற்றும் தொலைபேசிக் கொடுப்பனவுகளுக்கு மாதாந்தம் ரூபா. **0.666** மில்லியன் என்றவாறு ரூபா. **8.** மில்லியன் நிதியினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

குறைந்த வருமானப் பயனாளிகளான சிறுநீரக நோயாளர்களுக்கு ரூபா. 5000/- மாதாந்த வாழ்வாதார உதவிக் கொடுப்பனவினை வழங்குதல்.

முளையிலேயே இனங்காணப்படாத நீண்டகால சிறுநீரக நோயாளர்களுக்கு மாதாந்தக் கொடுப்பனவுகளினை வழங்குதல் **2015** ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுகிறது. ரூபா. **3000** வாழ்வாதார உதவியொன்றாக ஆரம்பிக்கப்பட்டு தற்போது ரூபா. **5000** வாழ்வாதார உதவியாக அமுலாக்கப்படுகிறது.

சுகாதார அமைச்சின் பரிந்துரையுடன் தீராத சிறுநீரக நோய் பரவியுள்ள **11** மாவட்டங்களிலுள்ள **84** பிரதேச செயலகப் பிரிவிலுள்ள நோயாளர்களுக்கு இக் கொடுப்பனவு வழங்கப்படுகிறது. 2020 செப்ரெம்பர் மாதம் தொடக்கம் முழுநாட்டினையும் உள்ளடக்கும் வகையில் சகல வகையிலான சிறுநீரக நோயினால் வருந்தும் **39,169** பயனாளிகளுக்குக் கொடுப்பனவினைச் செய்வதற்கு முடிந்துள்ளது. 2022 மே, யூன், யூலை மாதங்களுக்கு உலக வங்கிச் செயற்திட்டத்தின் கீழ் சிறுநீரக நோய்க்காக உதவி கிடைக்கும் பயனாளிகளுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவுக்கு மேலாக ரூபா. 2500/- மேலதிகக் கொடுப்பனவு மற்றும் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவொன்றினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதேபோல ஆசிய அபிவிருத்தி வங்கியினூடாக செப்ரெம்பர், ஒக்டோபர் மற்றும் நவம்பர் ஆகிய 03 மாதங்கள் தொடர்பிலும் மேற்குறிப்பிட்ட கொடுப்பனவுகளினை வழங்குவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

உரிய மாதம்	ரூ. 5000/- வழமையான கொடுப்பனவு தொடர்பில்		ரூபா. 2500/- மேலதிகக் கொடுப்பனவு தொடர்பில் **(top up)**		காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களுக்கு ரூபா. 5000/- கொடுப்பனவு தொடர்பில்	
	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	வழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.	பயனாளிகளின் எண்ணிக்கை	ழங்கப்பட்டுள்ள நிதி ரூ.மி.
2022 மே	**38945**	**194.7**	**21003**	**52.5**	**3256**	**16.3**
2022 யூன்	**38702**	**193.5**	**18791**	**47**	**3256**	**16.3**
2022 யூலை	**38316**	**191.6**	**20364**	**50.9**	**3256**	**16.3**
மொத்தம்		**579.8**		**163.1**		**48.9**
2022 செப்.	**38019**	**190.2**	**17126**	**42.8**	**1554**	**7.72**
2022 ஒக்.	**38096**	**190.5**	**16971**	**42.4**	**1565**	**7.84**
2022 நவம்.	**37946**	**189.8**	**16901**	**42.4**	**1529**	**7.64**
மொத்தம்		**570.5**		**127.6**		**23.2**

அங்கவீனமுற்ற நபர்களுக்குப் பிரத்தியேகத் துறையில் தொழில் வாய்ப்புக்களினை வழங்குதல்.

தொழிலில் ஈடுபடக்கூடிய நிலையிலுள்ள அங்கவீனமுற்ற நபர்கள் பிரத்தியேகத் துறையின் தொழிலுக்கு முன்வைக்கப்படுவர் என்பதுடன், அந்நிறுவனத்தினால் வழங்கப்படும் சம்பளத்திலிருந்து **50%** (ஆகக்கூடியது ரூபா. **15,000** என்றவாறு) **24** மாதங்களுக்கு இவ் அலுவலகத்தினூடாக கொடுப்பனவினைச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருகிறது. அதில், பிரதேச செயலகப் பிரிவுகள் மட்டத்தில் அங்கவீனமுற்ற நபர்களினை அடையாளம் காணுதல், தொழில்களினை வழங்குவதற்கு இணக்கத்தினைத் தெரிவிக்கும் பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைத்தல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளன. அதன் பிரகாரம், சகல மாவட்டச் செயலாளர்கள், பிரதேச செயலாளர்கள் கலந்துரையாடல்களினூடாகவும் அதேபோல சுற்றுநிரூபத்தினூடாகவும் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர் என்பதுடன், உடன்படிக்கையொன்றினூடாக பிரத்தியேக நிறுவனங்களினை ஒருங்கிணைப்பதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம், அடையாளம் காணப்பட்ட சுமார் **105** அங்கவீனமுற்ற நபர்களினை, **2020** ஆம் ஆண்டில் தொழிலில் ஈடுபடுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. எனினும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடி அதேபோல தொற்று நோயாளர்களினைக் காரணமாகக் கொண்டு பிரத்தியேகத் துறையில் புதிய ஆட்சேர்ப்புக்கள் வரையறுக்கப்பட்டமை, முன்னெடுக்கப்பட்ட நிறுவனங்கள் மூடப்பட்டமையின் காரணமாக வருட நிறைவில் பயனாளிகளின் எண்ணிக்கை 01 என வரையறுக்கப்பட்டது. புதிய தொழில் வாய்ப்புக்களுக்கான கேள்வி பாரியளவில் இதுவரையில் கிடைக்கப் பெற்றுள்ளது. தொழில்களினை வழங்குதல் தொடர்பில் பிரத்தியேக நிறுவனங்களுடன் கலந்துரையாடப்பட்டு வருகிறது. 2023 ஆம் ஆண்டில் பாரிய எண்ணிக்கையினருக்கு தொழில் பயிற்சி வாய்ப்புக்களினை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
105	ரூ. **10.0 மி.**	**2.77**

மருத்துவ உதவிகளினை வழங்குதல்

அரச மருத்துவசாலைகளில் வழங்கப்படாத மருந்துகளினை வழங்குவதற்கும், சிகிச்சைகளுக்குச் செல்லுவதற்கும், இருதயம், கண்வில்லைகள், சிறுநீரகம், மூளை, இடுப்பு எலும்பு மற்றும் கோக்லியர் உள்வைப்புகள் போன்ற வேண்டிய சத்திர சிகிச்சைக்குத் தேவையான செலவுகளினை ஈடுசெய்வதற்குமென, ரூபா. **6000** குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களுக்கு ஆகக்கூடியது ரூபா. **20,000** வரை இதன் கீழ உதவிகள் வழங்கப்படுகின்றது. கொவிட் 19 தொற்றுநோய் மற்றும் நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக

திட்டமிடப்பட்ட நடமாடும் சேவைகளினை நடாத்துவதற்கு இயலாது போகுதல், அந்நிகழ்ச்சித் திட்டத்தில் மீதமாகக் காணப்பட்ட ஒதுக்கீடுகள், அச்சடித்தல் செயற்பாடுகள் இடம்பெறாமையின் காரணமாக மீதமாகிய ஒதுக்கீடுகள், நாட்டில் நிலவிய நெருக்கடி நிலையின் காணரமாக கூட்டங்களினை நடாத்துதல் வரையறுக்கப்படுதல் மற்றும் Zoom தொழில்நுட்பத்தினூடாக நடாத்தப்பட்டமையின் காரணமாக பிற மற்றும் நிர்வாகச் செலவுகள் மீதமாகியமை, பொருளாதார நெருக்கடியின் காரணமாக விலைகள் உயர்ந்தமையின் காரணமாக கொள்முதல் செயற்பாடுகளின் சிக்கல்கள் காரணமாக தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டும்போது உதவிகள் வழங்குதல் வரையறுக்கப்படுதல். அம் மீதிகளினைப் பயன்படுத்தி மருத்துவ உதவிகளினை, காத்திருப்புப் பட்டியலிலுள்ள அதிகமான தொகுதியினருக்கு வழங்குவதற்கு முடிந்துள்ளது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
683	06.00	10.44 *

* உதவி உபகரண நிகழ்சித் திட்டத்தின் மூலம் மீதமான ரூபா. 0.72 மில்லியன் அச்சடிப்பு மற்றும் பிரசுரிப்புச் செயற்பாடுகளினால் மீதமாகிய ரூபா. 01.00 மில்லியன் மற்றும் நிர்வாகச் செயற்பாடுகளினால் மீதமாகிய ரூபா. 2.48 மில்லியன், தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுவதன் மூலம் மீதமான ரூபா. 0.4 மில்லியனும் இந் நிகழ்ச்சித் திட்டத்திற்காகப் பயன்படுத்தப்பட்டுள்ளது.

உதவி உபகரணங்களினை வழங்குதல்

அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு உதவுமுகமாக, ஒன்றுதிரட்டும் மேம்பாட்டிற்குப் பங்களிப்புச் செய்வதற்கும் மற்றும் அவர்களினைச் சுயாதீனமான நபர்களாக உருவாக்குவதற்கும் குறைந்த வருமானப் பயனாளிகளுக்கு, மூக்குக் கண்ணாடிகள், சக்கரநாற்காலிகள், செவிப்புலக் கருவிகள், முச்சக்கர வண்டிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள் போன்ற உபகரணங்கள் என்றவாறும், காற்று மெத்தை, நீர் மெத்தை போன்ற விசேட உபகரணங்கள் தொடர்பிலும் ஆகக்கூடியது ரூபா. **20,000/-** வரையான நிதியுதவிகளினை வழங்குவது இடம்பெறுகிறது. செவிப்புலக் கருவிகளினைப் பெறுவதற்கு ரூபா. 15,000/- தொடக்கம் ரூபா. 35,000/- வரையிலான நிதிந உதவியினை வழங்குதல் இடம்பெறுகிறது. குறைந்த வருமானம் பெறும் நபர்களுக்கு மருத்துவப் பரிந்துரைகளின் கீழ் இவ்வுதவி வழங்கப்படுகிறது. இவ்வருடத்தில் 19 நடமாடும் சேவைகள் முன்னெடுக்கப்பட்டு உபகரணங்கள் பின்வருமாறு பகிர்ந்தளிக்கப்பட்டுள்ளன. நாட்டில் நிவலிய தொற்றுநோய் நிலை, எரிபொருள் நெருக்கடியின் காரணமாக நடமாடும் சேவைகளினை நடாத்துவது வரையறுக்கப்பட்டுள்ளது.

கொமட் சக்கர நாற்காலிகள்	சக்கர நாற்காலிகள்	கையூன்று கோல்கள்	ஊன்று கோல்கள்	வோக்கர்	சிறுவர் சக்கர நாற்காலிகள்	மூக்குக் கண்ணாடிகள்	விசேட உபகரணங்கள்
01	31	09	05	10	31	13840	16

திறன் விருத்தி நிகழ்ச்சித் திட்டம்

அங்கவீனமுற்ற நபர்களினதும் மற்றும் அங்கவீனமுற்ற நபர்கள் கல்வி கற்கும் விசேடக் கல்வி அலகுகள் தொடர்பிலும் அவர்களின் விளையாட்டுக்கள், கலைகள், அழகியல் திறன்கள் மற்றும் பிற கெட்டித்தனங்களினை மெருகூட்டும் நோக்குடன் ரூபா. **50,000** ஆகக்கூடியதன் கீழ் நிதி அனுசரணை வழங்குதல் இந்நிகழ்ச்சித் திட்டத்தினூடாக இடம்பெறுகிறது. நாட்டில் நிலவிய பொருளாதார நெருக்கடியின் காரணமாக விலையேற்றத்தின் காரணமாக பொருட்களினைப் பெற்றுக் கொள்ளுதல் தொடர்பில் கொள்முதல் பிரச்சினைகள் எழுந்தமையின் காரணமாக வருடத்தின் ஆரம்ப காலாண்டுகளில் இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் விண்ணப்பங்கள் கிடைத்தல் வரையறுக்கப்பட்டிருத்தல்.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
06 நிறுவனங்கள்	**0.5**	**0.3**

சுய தொழில் உதவிகளினை வழங்குதல்

குறைந்த வருமானப் பயனாளிகளான அங்கவீனமுற்ற நபர்களின் குடும்பங்களில் காணப்படும் வறுமையினைக் குறைப்பதற்கு சுய தொழிலொன்றினை ஆரம்பித்தல் அல்லது மேம்படுத்துவதற்கு நபர் ஒருவருக்கு அல்லது குடும்பமொன்றுக்கு ஆகக்கூடியது ரூபா. **25,000** வரையான சுயதொழில் உதவிகளினை வழங்குவது இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் இடம்பெறுகிறது. அதேபோல, சுய தொழில்களிளை ஒழுங்குபடுத்தல், உற்பத்திகளினை தரமிக்கதாக மேம்படுத்துவதற்கு வழிகாட்டல் மற்றும் விற்பனை தொடர்பான தலையீடும் இங்கே இடம்பெறுகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
156 பயனாளிகள்	**4.0**	**4.06***

தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுவதன் மூலம் மீதமாகிய ரூபா. 0.4 மில்லியன் ஒதுக்கீடுகள் சுய தொழில் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் காத்திருப்புப் பட்டியலிலுள்ள விண்ணப்பதாரர்களுக்கு வழங்கப்பட்டுள்ளது.

கல்வி உதவிகளினை வழங்குதல்

குறைந்த வருமானம் பெறும் அங்கவீனமுற்ற பிள்ளைகள் மற்றும் அங்கவீனமுற்ற பாதுகாவலர்களின் பிள்ளைகளுக்குக் கல்வி உதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டமொன்று இந்நிகழ்ச்சித் திட்டத்தின் கீழ் வாழ்நாள்பூராவும் ஒரு தடைவை கிடைக்கப் பெறும் வகையில் ஆகக்கூடியது ரூபா. **10,000** என்றவாறு கல்வி உதவிகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கு உதவிகள் வழங்கப்படுகிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
421 பயனாளிகள்	**4.0**	**4.31 ***

தன்னார்வ அமைப்புக்களினை வலுவூட்டுதல்.

இச் செயலகத்தின் கீழ் 238 பதிவு செய்யப்பட்ட நிறுவனங்கள் காணப்படுவதுடன், இந் நிறுவனங்களில் அநேகமானவை முறைசார் நிதியுதவி கிடைக்கப் பெறாத நிறுவனங்களாகும். கிடைக்கும் வேண்டுகோள்களுக்கமைவாக, களப் பரீட்சிப்பினூடாக உறுதிப்படுத்தியதன் பின்னர் அந்நிறுவனங்களின் பௌதிக நிர்மாணிப்புத் தொடர்பில் ரூபா இரண்டு இலட்சம் வரை நிதியுதவியினை வழங்குவதற்கு இந்நிகழ்ச்சித் திட்டம் நடவடிக்கை எடுக்கிறது.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
03 நிறுவனங்கள்	**1.00**	**0.6**

சர்வதேச அங்கவீனமுற்றோர் தினக் கொண்டாட்டம்

இத்தடைவை சர்வதேச அங்கவீனர் தினக் கொண்டாட்ட வைபவம் "ஒரு அணுகக்கூடிய நியாயமான உலகினை வளர்ப்பதில் புதுமையான நுட்பங்களினைப் பயன்படுத்தி உள்ளடக்கிய வளர்ச்சிக்கான உருமாறும் தீர்வுகள்" என்ற தொனிப்பொருளினை மையமாகக் கொண்டு அலரி மாளிகையில் சர்வதேச அங்கவீனர் தின வைபவம் நடாத்தப்பட்டது. 2022 பராஒலிம்பிக் மற்றும் பொதுநலவாய நாடுகளின் விளையாட்டு நிகழ்வில் விசேட திறன்களினைக் காட்டிய 10 பேருக்கு ஞாபகார்த்த கேடயங்கள் பல்கலைக்கழகம் செல்லவுள்ள குறைந்த வருமானம் பெறும் மாணவ மாணவிகள் 10 பேருக்கு ரூபா. 75,000/- என்றவாறு பணப் பரிசில்களினை வழங்குதல் இடம்பெற்று அவர்கள் பாராட்டப்பட்டுள்ளனர். இந்நிகழ்ச்சித் திட்டம் தொடர்பில் ரூபா. 2.87 மில்லியன் செலவு செய்யப்பட்டுள்ளது.

வீடமைப்பு உதவிகளினை வழங்குதல்

எந்தவொரு வருமானமுமற்ற காணி தொடர்பில் உரித்தினைக் கொண்டிருந்தபோதும் வீடொன்று இல்லாத அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடு ஒன்றினைக் கட்டும் நிகழ்ச்சித் திட்டம் **2001** ஆம் ஆண்டிலிருந்து அமுலாக்கப்படுவதுடன், தேசிய லொத்தர் சபையின் சுப்பிரி வாசனா சீட்டிழுப்பினூடாக கிடைக்கப் பெறும் வருமானத்திலிருந்து **5%** வருடந்தோறும் இந்நிதியம் தொடர்பில் ஒதுக்கி நிதி ஒதுக்கீடுகள் வழங்கப்பட்டு வருகிறது.

புதிய வீடொன்றினை நிர்மாணிப்பதற்கு ரூபா. **250,000** நிதியும், பழுதுபார்ப்பதற்கு ரூபா. **150,000** நிதியும் தவணை அடிப்படையில் வழங்கப்படுகிறது.

ஒதுக்கீடுகள் போதாமையின் கீழ் இந்நிகழ்ச்சித் திட்டம் மந்தகதியிலுள்ளது என்பதுடன், வீட்டுக் கனவுடன் காத்திருப்புப் பட்டியலிலுள்ளவர்களின் எண்ணிக்கை **1650** க்கும் அதிகமாகும்.

பயனாளிகளின் எண்ணிக்கை	ஒதுக்கீடுகளின் அளவு (ரூ.மி.)	நிதி முன்னேற்றம் (ரூ.மி.)
113	**12.00**	**9.36**

எதிர்கால இலக்குகள்

- **2023** ஆம் ஆண்டில் 50 அங்கவீனமுற்ற நபர்கள் தொழிலில் ஈடுபடுத்தப்படுதல்.
- சைகைமொழி சட்டவரைவு அங்கீகரிக்கப்படுதல்.
- தற்போது திருத்த மட்டத்திலுள்ள அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்பு வசதிகளினை வழங்கும் வர்த்தமானிச் செயற்பாடுகள் நிறைவு பெறுதல்.
- 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்ட வரைத் திருத்தம் நிறைவு பெறுதல்.
- அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பினை வழங்கும் 03 நிறுவனங்களினை நிறுவுவதற்கு நடவடிக்கை எடுத்தல்.
- சைகை மொழியினை அரச உத்தியோகத்தர்கள் தொடர்பில் மேலதிக பாடமாக அமைத்தல்.

ஜயமாலி சீ.விக்ரமஆரச்சி,
பணிப்பாளர்,
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த ஆண்டுக்கான குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகள்

01 கூட்டுத் தகவல்

பொது

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் **(NSPD)**, 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் கீழ் 1996 ஆம் ஆண்டு ஒக்டோபர் 24 ஆந் திகதியன்று கூட்டிணைக்கப்பட்ட ஒரு நிறுவனமாகும். அங்கவீனமுற்ற நபர்களின் பதிவு செய்யப்பட்ட நிறுவனமானது பத்தரமுல்ல, செத்சிறிபாய கட்டம் **II** இல் 1 வது மாடியில் அமைந்துள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், மாதாந்த வாழ்வாதார உதவி, சுய தொழில் உதவி, கல்வி உதவி, மருத்துவ உதவி போன்ற உதவிகளினை அங்கவீனமுற்ற நபர்களுக்கு வழங்குவதில் ஈடுபட்டு வருகிறது.

இது தவிர, அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம், சிறுநீரக நோயாளர்களுக்கான மாதாந்த உதவி (நாட்பட்ட சிறுநீரக நோய், அறியப்படாத) மற்றும் தனிப் பெற்றாரினைத் தலைவராகக் கொண்ட குடும்பங்களுக்கு உதவியினை வழங்குவதையும் ஒருங்கிணைத்து வருகிறது.

02.இணக்கக் கூற்று

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் நிதிசார் கூற்றுக்களானவை, நிதிநிலவரக் கூற்று, விரிவான வருமானக் கூற்று, காசுப் பாய்ச்சல் கூற்று, சமபங்கு மாற்றங்கள் கூற்று, கணக்கியல் கொள்கைகள் மற்றும் நிதிசார் கூற்றுக்களின் குறிப்புக்களினை உள்ளடக்கியுள்ளன.

இந்தக் கூற்றுக்கள், இலங்கையின் பட்டயக் கணக்காளர்கள் நிறுவகத்தால் வகுக்கப்பட்ட இலங்கை பொதுத்துறை கணக்கியல் தர நிலைகளுக்கு இணங்க தயாரிக்கப்பட்டுள்ளது என்பதுடன், 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் பிற தேவைப்பாட்டுடன் இணங்குகிறது.

03. குறிப்பிடத்தக்க கணக்கியல் கொள்கைகளின் சுருக்கம் பொதுவான கொள்கைகள்

3.1.1 தயாரிப்பின் அடிப்படை

இந்த நிதிசார் கூற்றுக்களானவை, கிட்டிய ரூபா வடிவில் இலங்கை ரூபாக்களில் முன்வைக்கப்பட்டுள்ளன என்பதுடன், வரலாற்றுச் செலவினை அடிப்படையாகக் கொண்டு தயாரிக்கப்பட்டுள்ன. கணக்கீட்டுக் கொள்கைகள், முந்தைய ஆண்டுகளில் பயன்படுத்தபட்டவற்றுடன் தொடர்ந்து பிரயோகிக்கப்படுகின்றன.

3.1.2 ஒப்பீட்டுத் தகவல்

தற்போதைய நிலையினை உறுதிப்படுத்துவதற்குத் தேவையான போதெல்லாம், கடந்த ஆண்டின் புள்ளவிவரங்கள் மற்றும் கட்டங்கள் மறுசீரமைக்கப்பட்டுள்ளன.

3.1.3 ஐந்தொகை நிகழ்வுகளுக்குப் பின்

அனைத்து விடய பிந்தைய ஐந்தொகை நிகழ்வுகளும் பரிசீலிக்கப்பட்டு, பொருத்தமான இடங்களில், நிதிநிலைக் கூற்றுக்களுக்கு உரிய குறிப்பில் வெளிப்படுத்தல்களின் சரிசெய்தல்கள் செய்யப்பட்டுள்ளன.

3.2 சொத்துக்களின் மதிப்பீடு மற்றும் அவற்றின் அளவீட்டு அடிப்படைகள்

3.2.1 சரக்கிருப்புக்கள்

காலாவதியான மற்றும் மெதுவாக நகரும் பொருட்களுக்கான உரிய கொடுப்பனவுகளினை மேற்கொண்டதன் பின்னர், சரக்கிருப்புக்கள், குறைந்த விலை மற்றும் நிகர உணரக்கூடிய மதிப்பில் அளவிடப்படுகின்றன. நிகர உணரக்கூடிய மதிப்பு என்பது சாதாரண வணிகப் போக்கில் சரக்குகளை விற்கக்கூடிய விலையாகும் என்பதுடன், அவற்றின் மதிப்பீடு செய்யப்பட்ட விலை விற்பனைக்கு அவசியமாகும்.

சரக்குகளை, அதன் தற்போதைய நிலைக்குக் கொண்டு வருவதற்கான செலவுகள் மற்றும் நிபந்தனைகள் பின்வருமாறு கணக்கிடப்படுகின்றன: -

நுகர்வுப் பொருட்கள் – முதலில் உண்மையான செலவு - **first-out basis (FIFO)**

3.2.2 காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளும்

கையிலுள்ள காசு, தேவை வைப்புத் தொகை, குறுகிய கால அதிக திரவ முதலீடுகள், அறியப்பட்ட பணத்திற்கு உடனடியாக மாற்றக்கூடியதும் மற்றும் மதிப்பு மாற்றங்களின் சிறிய தாக்கத்தினையுமே காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளுமாக வரையறுக்கப்படுகிறது.

காசுப் பாய்ச்சல் கூற்றின் நோக்கத்திற்காக, காசும் மற்றும் காசுச் சமன்பாடுகளுமானவை, கையிலுள்ள காசு மற்றும் வங்கியிலுள்ள காசினையுமே உள்ளடக்குகிறது.

3.2.3 சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணம்

a) செலவு

சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்கள், குறைந்த செலவில் திரட்டப்பட்ட தேய்மானம் மற்றும் ஏதேனும் குறைபாடு, இழப்பு அல்லது ஆதாயத்தில் பதிவு செய்யப்படுகிறது.

b) மறுசீரமைப்புச் செலவு

முதலில் மதிப்பீடு செய்யப்பட்ட செயற்திறனிலிருந்து எதிர்பார்க்கப்படும் எதிர்காலப் பொருளாதாரப் பலன்களினை மீட்டெடுப்பதற்கு அல்லது பராமரிப்பதற்கு, சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களினைப் பழுதுபார்த்தல் அல்லது பராமரிப்பதற்குச் செய்யப்படும் செலவுகள், செலவுகளாக அங்கீகரிக்கப்படுகிறது.

c) தேய்மானம்

தேய்மானத்திற்கான ஒதுக்கீடு, ஆண்டின் தொடக்கத்தில் புத்தகங்களில் உள்ள சொத்துக்களின் சரிவு அல்லது குறைவான மதிப்பின் நிலையான சதவீதமாக, சரிவு

இருப்பு முறையைப் பயன்படுத்தி கணக்கிடப்படுகிறது. மதிப்பு. **SLPSAS 7** இன் பிரகாரம், ஒவ்வொரு ஆண்டும் தேய்மானத்தின் அளவு குறைக்கப்படுகிறது.

தளபாடங்கள் மற்றும் பாகங்கள்	**15%**
கணனிகள் மற்றும் **IT** உபகரணம்	**15%**

3.3 பொறுப்புக்கள் மற்றும் ஏற்பாடுகள்

ஐந்தொகைக் குறிப்பில் தற்போதைய பொறுப்புக்களாக வகைப்படுத்தப்படும் பொறுப்புக்கள், தேவையின் பேரில் அல்லது ஐந்தொகைக் குறிப்பிலிருந்து ஒரு வருடத்திற்குள் செலுத்த வேண்டியவையாகும்.

3.3.1 ஏற்பாடுகள்

கடந்த கால நிகழ்வின் விளைவாக **NSPD** க்கு தற்போதைய கடமை (சட்ட அல்லது ஆக்கபூர்வமான) இருக்கும்போது, பொறுப்புக்களினைத் தீர்ப்பதற்கு, பொருளாதார நன்மைகளை உள்ளடக்கிய வளங்களை வெளியேற்றுதல் வேண்டும் என்பதுடன், பொறுப்புக்களின் அளவு தொடர்பில் நம்பமான மதிப்பீட்டினைச் செய்யக்கூடிய வேளையில் முன் ஏற்பாடுகள் அங்கீகரிக்கப்படுகிறது.

3.4 விரிவான வருமானக் கூற்று

3.4.1 வருமானத்தினை இனங்காணுதல்

அரசாங்க மானியம்

மூலதனத்திற்கான அரசாங்க மானியம் தனித்தனியாக அடையாளம் காணப்பட்டுள்ளது. மூலதன மானியமானது, முக்கிய வருமான ஆதாரம் என்பதுடன் வருமானக் கூற்றில் வரவு வைக்கப்படுகிறது.

மேலும், சுப்பிரிவாசனா சம்பதா லொத்தர் விற்பனையின் மூலம் தேசிய லொத்தர் சபைக்குக் கிடைக்கும் இலாபத்தில் ஐந்து சதவீதம் (5%) அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடமைப்பு உதவிகளினை வழங்கும் நோக்கத்திற்காக திறைசேரி செயற்பாட்டுத் திணைக்களத்தினால் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய நிதியத்திற்கு வழங்கப்படுகிறது.

3.4.2 செலவினை அடையாளம் காணுதல்

அ) செலவினங்கள் மற்றும் குறிப்பிட்ட வருமானப் பொருட்களின் செயல்திறன் ஆகியவற்றுக்கு இடையேயான நேரடி தொடர்பின் அடிப்படையில் வருமான அறிக்கையில் செலவுகள் அடையாளம் காணப்படுகின்றன; செயல்பாடுகளை நடாத்துவதற்கும், சொத்து, பொறித்தொகுதி மற்றும் உபகரணங்களை திறமையான நிலையில் பராமரிப்பதற்கும் ஏற்படும் அனைத்து செலவுகளும் ஆண்டு வருமானத்திலிருந்து அறவீடு செய்யப்படுகிறது.

ஆ) வருமான அறிக்கையை சமர்ப்பிப்பதற்கு, செலவின முறையின் செயல்திறன் **NSPD** யின் செயல்திறன் அம்சங்களை நியாயமாக முன்வைத்துள்ளது என்பது தேசிய சபை

உறுப்பினர்களின் ஒருமித்த கருத்து என்பதால் அத்தகைய விளக்கக்காட்சி முறை பின்பற்றப்படுகிறது.

3.4.3 காசுப் பாய்ச்சல்

NSPD இன் காசுப் பாய்ச்சல், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகள் (**SLPSAS) 02 –** கூற்றின் பிரகாரம் "மறைமுக முறையை" பயன்படுத்தி முன்வைக்கப்பட்டுள்ளது.

4.0 கடப்பாடுகள் மற்றும் தற்செயல்கள்

தற்செயல்கள் என்பது கடந்த கால நிகழ்விலிருந்து எழும் சொத்துக்கள் அல்லது பொறுப்புக்கள் என்பதுடன், அவை **NSPD** இன் கட்டுப்பாட்டிற்கு அப்பாற்பட்ட நிச்சயமற்ற எதிர்கால நிகழ்வுகளின் நிகழ்வு அல்லது நிகழாத நிலையில் மட்டுமே அவை உறுதிப்படுத்தப்படுகின்றன.

5.0 சபை உறுப்பினர்களின் பொறுப்புக் கூற்றுக்கள்

இந் நிதிக் கூற்றினைத் தயாரிக்கும்போது முன்வைக்கும் பொறுப்பு அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபைக்கே உரித்தாகும்.

6.0 இறுதிக் கணக்குக்கான அங்கீகாரம்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையினால், இந்த இறுதிக் கணக்கு, 2023.02.16 ஆந் திகதியன்று நடைபெற்ற தேசிய சபைக் கூட்டத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
ஐந்தொகை மீதி

தேய்மானம்	ஐந்தொகை மீதி	
	DR	CR
NSPD நடைமுறைக் கணக்கு - BOC 2938104	9,834,598	
வீடமைப்பு நடைமுறைக் கணக்கு - BOC 7040561	928,711	
கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் - செலவு	4,117,485	
அலுவலக தளபாடங்கள் - செலவு	279,926	
வீடமைப்பு உதவி	12,509,425	
உதவி உபகரணங்கள்	8,296,276	
சர்வதேச அங்கவீனர் தினம்	2,898,465	
மருத்துவ உதவி	11,338,291	
சுய தொழில்	4,091,560	
கல்வி உதவி	4,344,169	
திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	300,000	
பிறெய்ல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	-	
அச்சு வெளியீடு மற்றும் பிற ஊடகம்	-	
சுய உதவி தன்னார்வமைப்பு	600,000	
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில்	2,750,130	
விசேட பாடசாலைகளுக்கான மானியங்கள்	-	
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் -1000	759,325	
பிற செலவினம்	659,420	
அலுவலக தளபாடங்கள் தேய்மானம்	20,457	
கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் தேய்மானம்	531,516	
கணக்காய்வுக் கட்டணம்	78,000	
சுபிரி வாசனா லாட்டரியிலிருந்து பெறப்பட்டது	82,597,195	
அரச மானியம்		31,880,000
சுப்பிரி வாசனா மானியம்		90,012,050
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில்		2,575,000
பிற கிடைப்பனவு		6,247,152
கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு		156,000
கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணம் -திரண்ட தேய்மானம்		1,105,564
அலுவலகத் தளபாடம் -திரண்ட தேய்மானம்		164,006
2021.12.31 அன்றுள்ளவாறான திரண்ட நிதி மீதி		14,795,178
	146,934,949	146,934,949

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான
காசுப் பாய்ச்சல் கூற்று

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில்)	2022	2021	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்			
மிகைகள்/(பற்றாக்குறைகள்)	81,537,169	444,758	* மீளக் குறிப்பிடப்பட்ட
காசற்ற அசைவுகள்			
தேய்மானம்	551,972	598,114	
சந்தேகத்திற்குரிய கடன்களுக்கான ஒதுக்கீடு அதிகரிப்பு	-	-	
செலுத்த வேண்டிய தொகை அதிகரிப்பு	78,000	(417,579)	* மீளக் குறிப்பிடப்பட்ட
கடன்களின் அதிகரிப்பு	-	-	
பணியாளர்களின் செலவுகள் தொடர்பான ஒதுக்கீடுகளில் அதிகரிப்பு	-	-	
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனையில் (ஆதாயங்கள்)/ இழப்புகள்	-	-	
முதலீடுகளின் விற்பனை தொடர்பில் ஏற்படும் (ஆதாயங்கள்)இழப்புக்கள்)	-	-	
பிற நடைமுறைச் சொத்துக்களின் அதிகரிப்பு			
மறுமதிப்பீடு காரணமாக முதலீடுகளில் அதிகரிப்பு	-	-	
வரவுகளில் அதிகரிப்பு	(76,612,050)	(2,395,300)	
செயற்பாட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	5,555,091	(1,770,007)	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்			
பொறித் தொகுதி மற்றும் உபகரணத்தினைக் கொள்வனவு செய்தல்	-	(1,560,348)	
பொறித் தொகுதி மற்றும் உபகரணங்களின் விற்பனை மூலம் கிடைக்கும் வருமானம்	-	-	
முதலீட்டு விற்பனையின் மூலம் கிடைக்கும் வருமானம்	-	-	
வெளிநாட்டு நாணய நோட்டுக்களினைக் கொ ள்வனவு செய்தல்	-	-	
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	-	(1,560,348)	
நிதி நடவடிக்கைகளிலிருந்து காசுப் பாய்ச்சல்	-	-	
கடன் வாங்குவதன் மூலம் கிடைக்கும் வருமானம்	-	-	
கடன்களை திருப்பிச் செலுத்துதல்	-	-	
அரசுக்கு வழங்குதல்/இலாபப் பங்கு	-	-	
நிதி நடவடிக்கைகளிலிருந்து தேறிய காசுப் பாய்ச்சல்	-	-	
காசு மற்றும் காசுச் சமன்பாடுகளில் தேறிய அதிகரிப்பு/(குறைவு)	5,555,091	(3,330,354)	
காலப் பகுதியின் ஆரம்பத்தில் காசு மற்றும் காசுச் சமன்பாடுகள் (குறிப்பு A)	5,208,219	8,538,573	
காலப் பகுதியின் முடிவில் காசு மற்றும் காசுச் சமன்பாடுகள் (குறிப்பு A)	10,763,309	5,208,219	
குறிப்பு A			
காசு மற்றும் காசுச் சமன்பாடுகள்			
சாதகமான மீதிகள்			
NSPD **நடைமுறைக் கணக்கு** - BOC 2938104	9,834,598	5,170,082	
வீடமைப்பு நடைமுறைக் கணக்கு - BOC 7040561	928,711	38,136	
குறுகிய கால முதலீடுகள்	-	-	
வருட நிறைவில் காசு மற்றும் காசுச் சமன்பாடுகள்	10,763,309	5,208,219	

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
2022 திசம்பர் 31 அன்றுள்ளவாறான
நிதிநிலவரக் கூற்று
(அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்)

	குறிப்பு	2022	2021	
சொத்துக்கள்				
நடைமுறைச் சொத்துக்கள்				
பெறத்தக்கவை மற்றும் வைப்புக்கள்	01	82,597,195	5,985,145	
காசும் மற்றும் காசுச் சமன்பாடும்	02	10,763,309	5,208,219	
		93,360,504	11,193,364	
நடைமுறையல்லாத சொத்துக்கள்				
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	03	3,127,842	3,679,814	
		3,127,842	3,679,814	
மொத்தச் சொத்துக்கள்		96,488,346	14,873,178	
பங்கு மற்றும் பொறுப்புக்கள்				
நடைமுறைப் பொறுப்பு				***மீளக் குறிப்பிடப்படுதல்**
ஒதுக்கீடுகள்	04	156,000	78,000	**(குறிப்பு 12)**
திரட்டப்பட்ட செலவுகள்				
		156,000	78,000	***மீளக் குறிப்பிடப்படுதல்**
நடைமுறையல்லாத பொறுப்புக்கள்				
மொத்தப் பொறுப்புக்கள்		156,000	78,000	***மீளக் குறிப்பிடப்படுதல்**
தேறிய சொத்துக்கள்		96,332,346	14,795,178	***மீளக் குறிப்பிடப்படுதல்**
பங்கு				***மீளக் குறிப்பிடப்படுதல்**
திரண்ட மிகைகள்/பற்றாக்குறைகள்		96,332,347	14,795,178	**(குறிப்பு 12)**
இருப்புக்கள்				
தேறிய பங்கு		96,332,347	14,795,178	***மீளக் குறிப்பிடப்படுதல்**

2022 திசம்பர் 31 ஆம் திகதியன்று, மேற்படி கொடுக்கப்பட்ட நிதி நிலவரக் கூற்று மற்றும் இணைக்கப்பட்ட ஏனைய நிதிநிலவரக் கூற்றுக்கள், இலங்கை பொதுத்துறை கணக்கியல் தரநிலைகளின் பிரகாரம் தயாரிக்கப்பட்டவை என்பதை உறுதிப்படுத்துகின்றோம்.
நிதிநிலவரக் கூற்றுக்களுக்கான பொறுப்புகளை நாம் ஏற்றுக்கொள்கிறோம்.

.....
திருமதி யமுனா பெரேரா
செயலாளர்,
மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சு.

.....
திருமதி. ஜயமாலி சி. விக்ரமஆரச்சி
பணிப்பாளர்,
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

.....
சபை உறுப்பினர்

.....
சபை உறுப்பினர்
உறுதிப்படுத்தப்படுதல்

.....
திருமதி. ஐ.எம்.ஐ.சி. இளங்கோன்- கணக்காளர்

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

அனைத்து தொகைகளும் இலங்கை ரூபாவில்	குறிப்பு	2022	2021
வருவாய்	05	130,714,202	64,187,366
பிற வருமானம்		-	-
		130,714,202	64,187,366
கழித்தல் : செலவுகள்			
நேரடி மூலதனச் செலவு	06	48,547,061	63,328,073
நிர்வாகம் மற்றும் தாபனச் செலவுகள்	07	629,972	676,114
மொத்தச் செலவுகள்		49,177,033	64,004,187
செயல்பாட்டு செலவுக்கு மேல் வருமானம்		81,537,169	183,179
கழித்தல்: நிதி மற்றும் பிற செலவுகள்		-	-
தேறிய மிகை/ (பற்றாக்குறை) பிற விரிவான வருமானத்திற்கு முன்னர்		81,537,169	183,179
பிற விரிவான வருமானம்		-	-
வருடத்திற்கான தேறிய மிகை/பற்றாக்குறை		81,537,169	183,179

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
சமபங்கு மாற்றங்களின் கூற்று

0

(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில்)

	திரண்ட நிதி ரூபா. சதம்.	மொத்தம் ரூபா. சதம்.	
2021 திசம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி	14,533,599	14,533,599	
கட்டிடத்தின் மீள் மதிப்பீடு			
காணியின் மீள் மதிப்பீடு			
முந்தைய ஆண்டு சரிசெய்தல் (* மீண்டும் கூறப்பட்டது, குறிப்பு 12)	261,579	261,579	(குறிப்பு 12)
2021 திசம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி (சரிசெய்யப்பட்டது)	14,795,178	14,795,178	
வருடத்தின்போது சீர் செய்தல்கள்			
காலப்பகுதிக்கான மிகை/(பற்றாக்குறை)	81,537,169	81,537,169	
2022 திசம்பர் 31 அன்றுள்ளவாறான மீதி	96,332,347	96,332,347	

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்

0	**2022**	**2021**
(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில்)		
குறிப்பு - 01 - பெறத்தக்கதவை மற்றும் வைப்புக்கள்		
சுப்பிரி வாசனா லொத்தரிலிருந்து பெறத்தக்கது	**82,597,195**	**5,985,145**
	82,597,195	**5,985,145**
குறிப்பு - 02 - காசும் மற்றும் காசுச் சமன்பாடும் சாதகமான மீதிகள்		
NSPD நடைமுறைக் கணக்கு - BOC 2938104	**9,834,598**	**5,170,082**
வீடமைப்பு நடைமுறைக் கணக்கு - BOC 7040561	**928,711**	**38,136**
	10,763,309	**5,208,219**

குறிப்பு - 03
சொத்து, பொறித் தொகுதி மற்றும் உபகரணம்

3.1 செலவு	**2021.01.01 அன்றுள்ளவாறான மீதி**	**மேலதிகம்/ மாற்றல்கள்**	**அகற்றல்கள் /மாற்றல்கள்**	**2022.12.31 அன்றுள்ளவாறான மீதி**
அலுவலகத் தளபாடங்கள்	**279,926**	**-**	**-**	**279,926**
கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	**4,117,485**	**-**	**-**	**4,117,485**
	4,397,411	**-**	**-**	**4,397,411**

3.2 தேய்மானம்	**அன்றுள்ளவாறான** -	**காலப்பகுதிக்கான கட்டணம்/மாற்றல்கள்**	**அகற்றல்கள் /மாற்றல்கள்**	**அன்றுள்ளவாறான**
அலுவலகத் தளபாடங்கள்	**143,549**	**20,457**	**-**	**164,006**
கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	**574,048**	**531,516**	**-**	**1,105,564**
	717,597	**551,972**	**-**	**1,269,569**

3.3 தேறிய புத்தக மதிப்பு	**2022.12.31 அன்றுள்ளவாறான மீதி**	**திரட்டப்பட்ட தேய்மானம் 2022.12.31**	**தேறிய புத்தக மதிப்பு 2022.12.31**
அலுவலகத் தளபாடங்கள்	**279,926**	**164,006**	**115,920**
கணனிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள்	**4,117,485**	**1,105,564**	**3,011,922**
	4,397,411	**1,269,569**	**3,127,842**

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில்)

குறிப்பு - 03
சொத்து, பொறித்குதி மற்றும் உபகரணம் ***(Contd.)***

3.3 தேறிய புத்தக மதிப்பு செலவில்	2022	2021
அலுவலகத் தளபாடங்கள்	115,920	136,377
கணனிகள் மற்றும் IT உபகரணங்கள்	3,011,922	3,543,437
	3,127,842	3,679,814

குறிப்பு - 04 - ஒதுக்கீடுகள்

			* மீளக் குறிப்பிடப்படுதல்
கணக்காய்வுக் கட்டணங்களுக்கான ஒதுக்கீடு	156,000	78,000	(குறிப்பு 12)
	156,000	78,000	

குறிப்பு -05 - வருவாய்

அரச மானியம்	31,880,000	40,250,000
சுப்பிரி வாசனா மானியம்	90,012,050	12,895,300
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில்	2,575,000	9,974,950
பிற கிடைப்பனவு	6,247,152	1,067,116
	130,714,202	64,187,366

குறிப்பு - 06 - நேரடி மூலதனச் செலவு

வீடமைப்பு உதவி	12,509,425	10,718,200
உதவி உபகரணங்கள்	8,296,276	13,115,132
சர்வதேச அங்கவீனமுற்ற நபர்களுக்கான தினம்	2,898,465	3,457,384
மருத்துவ உதவி	11,338,291	13,594,354
சுய தொழில்	4,091,560	4,987,218
கல்வி உதவி	4,344,169	5,475,681
திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	300,000	142,498
பிரெய்ல் பயிற்சி நிகழ்ச்சித் திட்டம்	-	-
அச்சு வெளியீடு மற்றும் பிற ஊடகம்	-	898,708
சுய உதவி தன்னார்வ அமைப்பு	600,000	575,000
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில்	2,750,130	9,701,134
விசேட பாடசாலைகளுக்கான மானியங்கள்	-	-
அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - 1000	759,325	29,175
பிற செலவு	659,420	633,590
	48,547,061	63,328,073

குறிப்பு - 07 - நிர்வாகம் மற்றும் தாபனச் செலவுகள்

அலுவலகத் தளபாடங்கள் தேய்மானம்	20,457	24,066
கணினிகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்கள் தேய்மானம்	531,516	574,048
கணக்காய்வுக் கட்டணங்கள்	78,000	78,000
	629,972	676,114

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவடைந்த வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்களுக்கான குறிப்புக்கள்
(அனைத்துத் தொகைகளும் இலங்கை ரூபாவில்)

குறிப்பு -08 -அங்கீகரிக்கப்படாத ஒப்பந்தம்சார் கடப்பாடுகள்

அறிக்கையிடும் திகதியில் எந்தவிதக் கடப்பாடுகளும் இல்லை.

குறிப்பு -09 -தற்செயலான பொறுப்புக்கள் மற்றும் தொடர்ச்சியான சொத்துக்கள்

09.1 தற்செயலான சொத்துக்கள்
அறிக்கையிடப்படும் திகதியின் பிரகாரம் தற்செயல் சொத்துக்கள் எதுவுமில்லை.

09.2 தற்செயலான பொறுப்பு
அறிக்கையிடும் திகதியில் வெளிப்படுத்தப்பட வேண்டிய தற்செயலான பொறுப்புகள் எதுவும் இல்லை.

குறிப்பு -10 அறிக்கையிடப்படும் திகதியின் பின்னர் நடைபெற்ற நிகழ்வுகள்

நிதி நிலவர திகதிக் கூற்றினைச் சரிசெய்தல் அல்லது நிதிநிலவர கூற்றுக்களில் வெளிப்படுத்துதல் தேவைப்படும் என்பதால் எந்தச் சூழ்நிலையும் எழவில்லை.

குறிப்பு - 11 -தொடர்புடைய கட்சி பரிவர்த்தனைகள்

தேசிய சபையின் அதன் உறுப்பினர்களினை, நிறுவனத்தின் முக்கியமான முகாமைத்துவப் பணியாளராக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம் கருதுகிறது.

2021 ஆம் ஆண்டில், முக்கிய நிர்வாகப் பணியாளர்கள் மற்றும் அவர்களது நெருங்கிய குடும்ப உறுப்பினர்களுடன் எந்தப் பரிவர்த்தனைகளும் நடைபெறவில்லை, LKAS 24-தொடர்புடைய கட்சி வெளிப்பாடுகளின் பிரகாரம் வெளிப்படுத்தப்படுதல் வேண்டும்.

கணக்காய்வுக் கட்டணக் கணக்கிற்கான ஒதுக்கீட்டின் இருப்பில் திருத்தம் செய்யப்பட்டது
தேசியக் கணக்காய்வு அலுவலகத்தின் உறுதிப்படுத்தல்களின் பிரகாரம், 2020 டிசம்பர் 31 ஆந் திகதியின் பிரகாரம் கணக்காய்வுக் கட்டணத்திற்கான கூடுதல் ஒதுக்கீடு பின்வருமாறு.

2021/12/31 அன்றுள்ளவாறான கணக்காய்வுக் கட்டணத்திற்கான	**ரூ. சதம்**
ஒதுக்கீடு	**339,579**
2021 ஆம் ஆண்டுக்கான கணக்காய்வுக் கட்டணத்திற்கான ஒதுக்கீடு	**(78,000)**
கணக்காய்வுக் கட்டணத்திற்கான கூடுதல் ஒதுக்கீடு	**261,579**

கணக்காய்வுக் கட்டணக் கணக்குக்கான ஒதுக்கீடு 2021	**ரூ. சதம்**	**ரூ. சதம்**
2021 நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீதி		**339,579**
கணக்காய்வுக் கட்டணத்திற்கான அதிகப்படியான ஒதுக்கீடுகளினைச் சரிசெய்தல்	**(261,579)**	
2021 ஆம் ஆண்டின் நிதிநிலை கூற்றுக்களுக்கான மீளக் குறிப்பிடப்பட்ட மீதி	**78,000**	

திரட்டப்பட்ட நிதிக் கணக்கு 2021	**ரூ. சதம்**	**ரூ. சதம்**
2021 ஆம் ஆண்டின் நிதிசார் கூற்றுக்களின் பிரகாரம் மீதி	**14,533,599**	
கணக்காய்வுக் கட்டணத்திற்கான அதிகப்படியான ஒதுக்கீடுகளினைச் சரிசெய்தல்		**261,579**
2021 ஆம் ஆண்டின் நிதிநிலவரக் கூற்றுக்களுக்கான மீளக் குறிப்பிடப்பட்ட மீதி	**14,795,178**	

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்
நாளேட்டுக் குறிப்புக்கள்
2022 திசம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்த வருடம் தொடர்பிலான

திகதி	விவரம்	உறுதிச்சீட்டு இல.	பற்று	செலவு
1/1/2022	கணக்காய்வுக் கட்டணம் தொடர்பில் ஒதுக்குதல் - பற்று		261,579	
	திரண்ட நிதி			261,579
	(கணக்காய்வுக் கட்டணத்திள் அதிகமான ஒதுக்கீட்டினைச் சரிசெய்தல்)			
1/1/2022	NSPD நடப்புக் கணக்கு - BOC 2938104 -பற்று		5,170,082	
	வீடமைப்பு நடப்புக் கணக்கு - BOC 7040561-பற்று		38,136	
	கணனி மற்றும் கணனி உபகரணங்கள் -செலவு-பற்று		4,117,485	
	அலுவலகத் தளபாடங்கள் -செலவு - பற்று		279,926	
	சுப்பிரி வாசனா அதிருஸ்ட இலாபச் சீட்டிலிருந்து கிடைக்க வேண்டிய நிதி - பற்று		5,985,145	
	கணனி மற்றும் கணனி உபகரணங்கள் -திண்ட தேய்மானம்			574,048
	அலுவலகத் தளபாடங்கள் -திரண்ட தேய்மானம்			143,549
	கணக்காய்வுக் கட்டணம் தொடர்பில் ஒதுக்குதல்			78,000
	2021.12.31 ஆந் திகதிய திரண்ட நிதிய மீதி			14,795,178
	(முந்தைய ஆண்டு மீதிகளினை முன்கொண்டு செல்லுதல்)			
12/31/2022	அலுவலகத் தளபாடங்கள் தேய்மானம் - பற்று		20,457	
	அலுவலகத் தளபாடங்கள் -திரண்ட தேய்மானம்			20,457
	(அலுவலகத் தளபாடங்களின் வருடாந்தத் தேய்மானத்தினை அறிக்கையிடுதல்)			
12/31/2022	கணனி மற்றும் கணனி உபகரணங்கள் -தேய்மானம் -பற்று		531,516	
	கணனி மற்றும் கணனி உபகரணங்கள் -திண்ட தேய்மானம்			531,516
	(கணனி மற்றும் தகவல் தொழில்நுட்ப உபகரணங்களின் வருடாந்தத் தேய்மானத்தினை அறிக்கையிடுதல்)			
12/31/2022	கணக்காய்வுக் கட்டணங்கள்		78,000	
	கணக்காய்வுக் கட்டணம் தொடர்பில் ஒதுக்குதல்			78,000
	(2022 ஆம் ஆண்டு தொடர்பில் கணக்காய்வுக் கட்டணங்களினை ஒதுக்குதல்)			

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்

நாளேட்டுக் குறிப்புக்கள்

2022 திசம்பர் 31 ஆந் திகதி நிறைவடைந்த வருடம் தொடர்பிலான

திகதி	விவரம்	உறுதிச்சீட்டு இல.	பற்று	செலவு
12/31/2022	அரசு உதவி கிடைப்பனவுகள் - பற்று		31,880,000	
	சுப்பிரி வாசனா சம்பத உதவிக் கிடைப்பனவுகள் - வரவு		90,012,050	
	அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில் - பற்று		2,575,000	
	பிற கிடைப்பனவுகள் - பற்று		6,247,152	
	வீடமைப்பு உதவி			12,509,425
	உதவி உபகரணங்கள்			8,296,276
	சர்வதேச அங்கவீனர் தினம்			2,898,465
	மருத்துவ உதவி			11,338,291
	சுயதொழில் உதவி			4,091,560
	கல்வி உதவி			4,344,169
	திறன் விருத்தி மற்றும் பயிற்சி நிகழ்ச்சித் திட்டங்கள்			300,000
	சுய உதவி தன்னார்வ அமைப்புக்கள்			600,000
	அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - தொழில்			2,750,130
	அங்கவீனமுற்ற நபர்களினை வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டம் - 1000			759,325
	இதர செலவுகள்			659,420
	அலுவலகத் தளபாடங்களின் தேய்மானம்			20,457
	கணனி மற்றும் கணனி உபகரணங்களின் தேய்மானம்			531,516
	கணக்காய்வுக் கட்டணங்கள்			78,000
	திரண்ட நிதியம்			81,537,169
	(வருமானம் மற்றும் செலவுகளினை திரண்ட நிதியத்திற்கு மாற்றுவதை அறிக்கையிடுதல்)			

தவிசாளர்,

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 ஆம் ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிசார் கூற்றுக்கள், பிற சட்டம்சார் மற்றும் ஒழுங்குசார் தேவைப்பாடுகள் தொடர்பிலான 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 வது பிரிவின் பிரகாரம் கணக்காய்வாளர் அதிபதியின் அறிக்கை

1. நிதிசார் கூற்றுக்கள்

1.1. கருத்துரை

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய நிதி நிலவரக் கூற்று, அத்தினம் நிறைவு பெற்ற வருடத்திற்கான நிதிச் செயற்திறன் கூற்று, தேறிய சொத்துக்களின் மாற்றக் கூற்றுக்கள், அத்தினத்துடன் முடிவுற்ற வருடத்திற்கான காசுப் பாய்ச்சல் கூற்று, நிதிக்கூற்றுக்களுடன் தொடர்பிலான குறிப்புக்கள் மற்றும் பொழிப்புச் செய்யப்பட்ட முக்கிய கணக்கீட்டுக் கொள்கைகளினை உள்ளடக்கி 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்கள், இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் அரசியல் அமைப்பின் 154(1) உறுப்புரையுடன் திருத்தப்பட்டு வாசிக்கப்பட வேண்டிய 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் ஏற்பாடுகளின் பிரகாரம் எனது அவதானிப்பின் கீழ் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது. அரசியல் அமைப்பின் 154(6) உறுப்புரையின் பிரகாரம் எனது அறிக்கை காலக்கிரமத்தில் பாராளுமன்றத்திற்கு முன்வைக்கப்பட்டு நிறைவேற்றப்படும்.

செயலகத்தின் நிதிசார் கூற்றுக்களினூடாக 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய நிதி நிலவரம், அத்தினத்துடன் நிறைவு பெற்ற வருடத்திற்கான அதன் நிதிச் செயற்திறன் மற்றும் காசுப் பாய்ச்சல், இலங்கை அரச துறையின் கணக்கீட்டுக் கொள்கைகளுக்கிணங்க உண்மை மற்றும் நியாயபூர்வமான நிலையினை எடுத்துக் காட்டுகிறது என்பதே எனது கருத்தாகும்.

1.2. தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பிலான அடிப்படை

இலங்கை கணக்காய்வு நியமங்களின் (இ.க.நி.) பிரகாரம் என்மூலம் கணக்காய்வு இடம்பெற்றுள்ளது. இக் கணக்காய்வு நியமங்களின் கீழான எனது பொறுப்பு, இவ்வறிக்கையின் நிதிக் கூற்றுக்கள் ஆய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் பொறுப்பு போன்ற பிரிவுகளில் மேலும் விவரிக்கப்பட்டுள்ளது. என்மூலம் புலனாய்வு செய்யப்பட்ட தகுதிவாய்ந்த கருத்துரை தொடர்பில் அடித்தளமொன்றினை வழங்குவதற்கு என்மூலம்

வழங்கப்பட்டுள்ள கணக்காய்வு சாட்சிகள் போதுமானவை எனவும் உசிதமானவை எனவும் நம்புகின்றேன்.

1.3. **செயலகத்தின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்ட பிற தகவல்கள்.**

இக்கணக்காய்வு அறிக்கையின் திகதிக்குப் பின்னர் எனக்கு வழங்குவதற்கு எதிர்பார்த்திருக்கும் செயலகத்தின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு, நிதிக் கூற்றுக்கள் மற்றும் அது தொடர்பிலான எனது கணக்காய்வு அறிக்கையில் உள்ளடக்கப்படாத தகவல்கள், பிற தகவல்களாகக் கருதப்படும். இப்பிற தகவல்கள் தொடர்பில் முகாமைத்துவம் பொறுப்புக்கூறுதல் வேண்டும்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கருத்துரைகள், பிற தகவல்களினை உள்ளடக்காது என்பதுடன், நான் அது தொடர்பில் எந்தவொரு வகையிலான உறுதியுரையினையோ அல்லது கருத்துரையினையோ வெளிப்படுத்த மாட்டேன்.

நிதிக் கூற்றுக்கள் தொடர்பிலான எனது கணக்காய்வுக்கான எனது பொறுப்பாகவிருப்பது, மேற்குறிப்பிட்ட அடையாளம் காணப்பட்ட பிற தகவல்களினை வழங்கக்கூடியவேளையில் வாசித்தல் மற்றும் அவ்வாறு செய்யும்போது பிற தகவல்கள் நிதிக்கூற்றுக்களுடன் அல்லது கணக்காய்வின்போது அல்லது பிற முறைமைகளில் பெறப்பட்ட எனது அறிவின் பிரகாரம் போதியவாறு பொருந்தாதுள்ளதா என்பதைக் கவளத்திற் கொள்ளுதலாகும்.

செயலகத்தின் 2022 ஆம் ஆண்டு அறிக்கையினை வாசிக்கும்போது, அதில் கணிசமான தவறுகள் காணப்படுவதாக நான் புலனாய்வு செய்திருப்பின், சரி செய்வதற்கு, நிர்வகிக்கும் பகுதியினருக்கு அவ்விடயங்களினை தொடர்பாடல் செய்தல் வேண்டும். மேலும், சரி செய்யப்படாது தவறுகள் காட்டப்பட்டிருப்பின், அது அரசியியல் அமைப்பின் 154(6) வது உறுப்புரையின் பிரகாரம் என்மூலம் காலக்கிரமத்தில் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும் அறிக்கையில் உள்ளடக்கப்படும்.

1.4. **நிதிக் கூற்றுக்கள் தொடர்பில் முகாமைத்துவத்தினதும் மற்றும் நிர்வகிக்கும் பகுதியினரினதும் பொறுப்புக்கள்.**

இந்நிதிக் கூற்றுக்களினை, இலங்கை அரச துறையின் கணக்கீட்டு நியமங்களுக்கிணங்க தயாரித்தல், நியாயமானதாக முன்வைத்தல் மற்றும் ஊழல் அல்லது தவறின் காரணமாக ஏற்படக்கூடிய போதிய தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நிதிக்கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு முடியுமான வகையில் தேவையான உள்ளக நிர்வாகத் தீர்மானம் எடுத்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பாகும்.

நிதிக் கூற்றுக்களினைத தயாரிக்கும்போது, செயலகத்தினைத் தொடர்ந்து முன்னெடுத்துச் செல்லும் இயலுமையினைத் தீர்மானித்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பு என்பதுடன், முகாமைத்துவம், செயலகத்தினை முடிவுக்குக் கொண்டு வருவதற்கு எண்ணுமாயின், அல்லது வேறு மாற்றுவழியொன்று இல்லாதவிடத்து செயற்பாடுகளினை நிறுவத்துவதற்கு நடவடிக்கை எடுக்குமாயின், தொடர்ந்து முன்னெடுப்பதை அடிப்படையாகக் கொண்டு கணக்குவைத்தல் மற்றும் செயலகத்தினை தொடர்ந்து நடாத்துவதற்கான விடயங்களினை வெளிக்கொணர்தல் முகாமைத்துவத்தின் பொறுப்பொன்றாகும்.

செயலகத்தின் நிதி அறிக்கையிடும் செயற்பாடு தொடர்பில் பரிட்சிக்கும் பொறுப்பு, நிர்வகிக்கும் பகுதியினரினால் இடம்பெறும்.

2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 16(1) உப பிரிவின் பிரகாரம், செயலகத்தின் வருடாந்த மற்றும் காலத் தேவையான நிதிக் கூற்றுக்களினைத் தயாரிப்பதற்கு இயலுமானவாறு சுய வருமானங்கள், செலவுகள், சொத்துக்கள் மற்றும் பொறுப்புக்கள் தொடர்பிலான சரியான வகையில் புத்தகங்கள் மற்றும் அறிக்கைகள் முன்னெடுத்துச் செல்லப்படுதல் வேண்டும்.

1.5. நிதிக் கூற்றுக் கணக்காய்வு தொடர்பில் கணக்காய்வாளரின் அறிக்கை

ஒட்டுமொத்தமாக நிதிசார் கூற்றுக்கள், ஊழல் மற்றும் தவறின் காரணத்தினல் ஏற்படும் போதுமான தவறான கூற்றுக்களினைத் தவிர்த்து, நியாயத்தினை மேலும் வழங்குதல் மற்றும் எனது கருத்துரையினை உள்ளடக்கி கணக்காய்வாளரின் பொழிப்பு அறிக்கையினை வழங்குதல் எனது நோக்கமாகும். நியாயத்தினை உறுதிப்படுத்துதல் உயர்மட்ட உறுதிப்பாடு எனினும், இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வினை முன்னெடுக்கும்போது, அது எந்நேரமும் கணிசமான தவறான கூற்றுக்களினை வெளிக்கொணர்ந்துள்ளது என்பது உறுதிப்படுத்தப்படவில்லை. ஊழல் மற்றும் தவறு தனியாகவோ அல்லது கூட்டாகவோ தாக்கத்தினை விளைவிக்கும் என்பதால் தவறான கூற்றுக்கள் ஏற்பட முடியும் என்பதுடன், இந்நிதிக் கூற்றினை அடிப்படையாகக் கொண்டு, பயன்பாட்டாளர்களினால் பொருளாதாரத் தீர்மானங்களினை எடுக்கும்போது அது தொடர்பில் கவனத்திற் கொள்ளப்படுதல் வேண்டும்.

இலங்கை கணக்காய்வு நியமங்களின் பிரகாரம் கணக்காய்வின் பகுதியொன்றாக என்மூலம் தொழில் முறை தீர்ப்பு மற்றும் தொழில் முறை சந்தேகத்துடன் கணக்காய்வு செய்யப்பட்டுள்ளது, என் மூலம் மேலும்,

- வெளிப்படுத்தப்பட்ட கணக்காய்வு கருத்துரைக்கு அடிப்படையொன்றினை வழங்கும்போது, ஊழல் அல்லது தவறின்

காரணமாக நிதிக் கூற்றுக்களில் ஏற்படக்கூடிய கணிசமான தவறான கூற்றில் கவனத்தினைச் செலுத்திய வேளையில் மற்றும் மதிப்பீடு செய்தவேளையில் தருணத்திற்கேற்ப உயர் கணக்காய்வு முறைமையினைத் திட்டமிட்டு ஊழல் மற்றும் தவறின் காரணத்தினால் ஏற்படும் பாதிப்பினைக் கைவிடுவதற்கு போதிய மற்றும் பொருத்தமான கணக்காய்வுச் சாட்சிகளினைப் பெற்றுக் கொள்ளுதல் எனது கருத்துரையாகும். போதிய தவறான கூற்றினால் இடம்பெறும் விளைவுகளுக்கு மேலாக ஊழல்களினால் இடம்பெறும் தாக்கம் அதிகமானது என்பதுடன், பிளவு, தவறு ஏட்டினைத் தயாரித்தல், வேண்டுமென்றே கைவிடுதல் அல்லது உள்ளகக் கட்டுப்பாடுகளினைக் கைவிடுதல் தவறொன்று ஏற்படுவதற்குக் காரணமாகும்.

- உள்ளகக் கட்டுப்பாட்டின் விளைத்திறன் தொடர்பில் கருத்துரையினை வெளிப்படுத்தும் எண்ணம் இல்லாதபோதிலும், தருணத்திற்கு ஏற்ப உகந்த கணக்காய்வு முறைமையினைத் திட்டமிடுவதற்கு உள்ளகக் கட்டுப்பாடு தொடர்பில் புரிந்துணர்வொன்று பெறப்பட்டுள்ளது.

- பயன்படுத்தப்பட்ட கணக்கீட்டுக் கொள்கைகளின் உன்னதமான தன்மை, கணக்கீட்டு மதிப்பீடுகளின் நியாயமான தன்மை மற்றும் முகாமைத்துவத்தினால் மேற்கொள்ளப்பட்ட தொடர்பு வெளிப்பாடு மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

- சம்பவங்கள் அல்லது விடயங்களின் காரணமாக செயலகத்தினைத் தொடர்ந்து நடாத்துவது தொடர்பில் போதுமான நிச்சயமற்றதன்மையொன்று காணப்படுதல் என்பது தொடர்பில் பெறப்பட்ட கணக்காய்வுச் சான்றுகளினை அடிப்படையாகக் கொண்டு கணக்கீட்டுக்கான நிறுவத்தினைத் தொடர்ந்து நடாத்துவது தொடர்பிலான அடிப்படை தீர்மானிக்கப்பட்டுள்ளது. போதிய நிச்சயமற்றதன்மையொன்று ஏற்பட்டுள்ளதாக என்மூலம் புலனாய்வு செய்யப்படுமாயின், நிதிக்கூற்றுக்களில் அது தொடர்பிலான வெளிக்கொணர்வுகளுக்கு எனது கணக்காய்வு அறிக்கையில் கவனத்தினைச் செலுத்துதல் வேண்டும் என்பதுடன், அவ்வெளிக்கொணர்வுகள் போதாதாயின் எனது கருத்துரை ஆய்வு செய்யப்படுதல் வேண்டும். எவ்வாறாயினும், எதிர்கால சம்பவங்கள் அல்லது விடயங்களின் கீழ் தொடர்ந்து முன்னெடுப்பதை நிறைவு செய்வதற்கு முடியும்.

- நிதிக்கூற்றுக்களின் கட்டமைப்பு, உள்ளடக்கப்படுவதற்கு அடிப்படையாகக் கொள்ளப்பட்ட கொடுக்கல் வாங்கல்கள், சம்பவங்களினை, சிறந்தவாறும் மற்றும் நியாயபூர்வமானவாறும் நிதிக்கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டிருத்தல் மதிப்பீடு செய்யப்பட்டுள்ளது.

எனது கணக்காய்வின்போது இனங்காணப்பட்ட முக்கிய கணக்காய்வினை அலசி ஆராய்தல், பிரதான உள்ளகக் கட்டுப்பாட்டுப் பலவீனங்கள் மற்றும் ஏனைய விடயங்கள் தொடர்பில் நிர்வகிக்கும் பகுதியினர் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

2. பிற சட்டம்சார் மற்றும் ஒழுங்குசார் தேவைப்பாடுகள் தொடர்பிலான அறிக்கை

2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தில் பின்வரும் தேவைப்பாடுகள் தொடர்பில் விசேட ஏற்பாடுகள் உள்ளடக்கப்பட்டுள்ளன.

2.1.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(அ) வது பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாடுகளின் பிரகாரம், கணக்காய்வுக்குத் தேவையான சகல தகவல்களினை தெளிவுபடுத்துதல் என் மூலம் வழங்கப்பட்டுள்ளதுடன், எனது பரிட்சிப்பில் புலப்படும் முறைமைக்கமைய சரியான நிதி அறிக்கைகளினை செயலகம் முன்னெடுத்துள்ளது.

2.1.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 6(1)(இ)**(iii)** வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் செயலகத்தின் நிதிக் கூற்றுக்கள் கடந்த வருத்துடன் ஒத்துப்போகிறது.

2.1.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் பிரகாரம் 6(1)(இ)**(iv)** வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் கடந்த வருடத்தில் என்மூலம் இடம்பெற்ற பரிந்துரையில் முன்வைக்கப்பட்ட நிதிக் கூற்றுக்களில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

2.2. பின்பற்றப்பட்ட செயற்பாடுகள் மற்றும் பெறப்பட்ட சான்றுகளின் கீழ், போதுமான விடயங்களுக்கு வரையறுத்து, பின்வருமாறு வெளிப்படுத்துவதற்கு ஏற்றவாறு எந்தவொரு விடயமும் எனது கவனத்திற்கு எட்டவில்லை.

2.2.1. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12 (ஈ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் செயலகத்தின் நிர்வாக சபையின் யாரேனும் அங்கத்தவருக்கு செயலகம் தொடர்பிலான யாதேனும் உடன்படிக்கை தொடர்பில் நேரடியாகவோ அல்லது மறைமுகமாகவோ சாதாரணமான வியாபார நிலைமையினைத் தாண்டி தொடர்புள்ளது தொடர்பானது.

2.2.2. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஊ) உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் புலனாய்வுகளினைத் தவிர்த்து, ஏதேனும் எழுத்துமூல சட்டத்திற்கு செயலகத்தின் நிர்வாக சபையினால் வழங்கப்பட்டுள்ள பிற பொது அல்லது விசேட ஏற்பாடுகளுக்கு இணங்காது செயற்படுதல் தொடர்பானது.

சட்டங்கள் விதிகள்/ஏற்பாடுகளுக்கு முன்வைத்தல்	**அவதானிப்புக்கள்**
(அ) இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரசின் நிதிப் பிரமாணக் கோவையின் நி.பி. 396 (அ)	2022 திசம்பர் 31 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட 06 மாதங்கள் கடந்த கொடுப்பனவு தொடர்பில் முன்வைக்கப்படாத பெறுமதி ரூபா. 133,492 ஐக் கொண்ட காலங்கடந்த 14 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்படாமை.
(ஆ) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் 7(3) உட்பிரிவு	**(i)** நிர்வாக சபையினால், பாதிக்கப்பட்ட பிரிவினர் மாதாந்தம் ஒரு தடைவை அழைக்கப்படுதல் வேண்டும் என்ற போதிலும், 2022 ஆம் ஆண்டு தொடர்பில் 03 கூட்டத் தொடர்கள் மாத்திரம் நடாத்தப்பட்டிருத்தல். **(ii)** சபையின் அங்கத்தவர்களினைக் கூட்டி கலந்துரையாடி தீர்மானங்களுக்கு வரும்போது வாய்ப்புக்களினை வழங்குதல் சிறந்த நிலைமையில் காணப்படாமையின் காரணமாக சபையின் செயற்பாடுகளினை போதுமானவாறு நிறைவேற்றும் வாய்ப்பு செய்து கொடுக்கப்படாமை. அதனூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் நோக்கங்களினை எட்டச் செய்வதில் பாரிய தாக்கங்களினை விளைவித்தது.

2.2.3. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(எ) வது உட்பிரிவில் குறிப்பிடப்பட்ட தேவைப்பாட்டின் பிரகாரம் பின்வரும் புலனாய்வுகளினைத் தவிர்த்து, செயலகத்தின் அதிகாரங்கள், பணிகள் மற்றும் செயற்பாடுகளுக்கு இணங்காதவாறு நடவடிக்கை எடுக்கப்பட்டிருத்தல் தொடர்பானது.

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் 13 வது பிரிவின் ஏற்பாடுகளின் பிரகாரம், அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் மேம்படுத்துவதற்கு, மீள்விருத்தி செய்வதற்கு மற்றும் பாதுகாப்பதற்குப் பொறுப்புக்கூறும் வகையிலான சட்டத்தில் காட்டப்பட்ட செயற்பாடுகளினை நிறைவேற்றுவதற்கு தேசிய சபையின் அவதானம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

(அ) அங்கவீனமுற்ற நபர்களின் நலன்புரியினை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் மீள்விருத்தி செய்தல் தொடர்பில் அரசுக்கு ஆலோசனைகளினை வழங்குதல்.

(ஆ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான சர்வதேசப் பிரகடனங்கள் மற்றும் உடன்படிக்கைகள் அரசினால் அங்கீகரிக்கப்படுவதாகவும் மற்றும் பின்பற்றப்படுவதாகவும் பொறுப்பு நிற்றல்.

(இ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலும் மற்றும் அவ்வாறான நபர்களுக்கு வழங்கக்கூடிய சேவைகள் தொடர்பிலும் சரியான புள்ளி விவரங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.

(ஈ) அங்கவீனத்திற்கான பிரதான காரணங்களினை என்ன என்பதை தேடி அறிந்து கொள்ளுதல், அவற்றினைத் தடுக்கும் மற்றும் கட்டுப்படுத்தும் விளைத்திறனான நடவடிக்கைகளினை ஊக்குவித்தல்.

(உ) அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு எடுக்கப்பட வேண்டிய நடவடிக்கைகளினை தயாரித்து அவற்றினை ஊக்குவித்தல்.

(ஊ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான புனர்வாழ்வு நிலையங்களினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல்.

(எ) அங்கவீனமுற்ற நபர்களுக்குத் தங்குமிட வசதிகளினை வழங்கி அவர்களினைப் பாதுகாப்பதற்கு நிறுவனங்களினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல் மற்றும் அவ்வாறான நிலைமையிலுள்ள நபர்களுக்கு கல்வி மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சியினை வழங்குதல்.

(ஏ) அங்கவீனமுற்ற நபர்கள் பிரவேசிக்கக்கூடிய பௌதிகச் சூழலினைத தயாரிக்கும் வேலைத்திட்டத்தினை அறிமுகப்படுத்துதல், தகவல்களினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும் மற்றும் தொடர்பாடலுக்கான அணுகலினை அங்கவீனமுற்ற நபர்கள் பெற்றுக் கொள்ளக்கூடிய பிரேரணைத் திட்டங்களினை அமுலாக்குதல்.

(ஐ) பிரசுரங்களினை வெளியிடுதல் மற்றும் பிற வேலைத்திட்டங்களினூடாக அங்கவீனமுற்ற நபர்களின் நிலைமை மற்றும் தேவைகள் தொடர்பில் பொதுமக்களினை விழிப்புணர்வூட்டுதல்.

(ஒ) அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்க்கைத தரத்தினை மேம்படுத்தும் திட்டங்கள் தொடர்பில் கல்வி மற்றும் ஆய்வு தொடர்பில் வலுவூட்டுதல் மற்றும் சகல செயற்பாடுகளிலும் அவர்களின் பங்களிப்பினை ஊக்குவித்தல்.

2.2.4. 2018 ஆம் ஆண்டின் 19 ஆம் இலக்க தேசியக் கணக்காய்வுச் சட்டத்தின் 12(ஏ) வது பிரிவில் குறிப்பிடப்பட்டதேவைப்பாட்டின் பிரகாரம் செயலகத்தின் வளங்களினை சிக்கனமாகவும், வினைத்திறனாகவும் மற்றும் விளைத்திறனாகவும் காலப்பகுதியினுள் உரிய சட்டதிட்டங்களுக்கு அமைவாக கொள்முதல் செய்து பயன்படுத்தப்படாதிருத்தல் தொடர்பானது.

(அ) நிதியத்திற்குக் கிடைக்கும் அரச மானியங்களினைப் பயன்படுத்தி மீதமாகும் மேலதிக காசு மீதி, மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 9,834,598 என்பதுடன், கடந்த 4 வருடக் காலப்பகுதியினுள் அது ரூபா. 5,170,082 தொடக்கம் ரூபா. 12,062,708 வரையான இடைவெளியினைக் கொண்ட காசு மீதி வங்கி நடமாடும் கணக்கில் தேங்கியிருந்தது. 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் 19 வது பிரிவின் பிரகாரம் சபைக்கு உரித்தான ஏதேனும் நிதி சபையினால் உறுதிப்படுத்தப்படும் முறைமைக்கு முதலீடு செய்ய முடியுமாயினும் கடந்த 5 வருடக் காலப்பகுதியினுள் அவ்வாறு முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம் மேலதிக நிதி முதலீடு செய்யப்படாமையின் காரணமாக 2018 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதியத்திற்கு இல்லாது போயிருந்த வட்டி வருமானம் அண்ணளவான ரூபா. 4,300,000 என அவதானிக்கப்பட்டது.

(ஆ) அங்கவீனமுற்ற நபர்களுக்குச் சம வாய்ப்புக்களினை வழங்குதல், வலுவூட்டுதல், நலன்புரி மற்றும் நலனினை முன்னிட்டு நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை, தேசிய மட்டத்தில் வெளிப்படைத்தன்மையுடனும் மற்றும் முறையாகவும் பயன்களினை சமமாக வழங்குவதற்கு வசதியாகும் வகையில் அமுலாக்குவதற்கு அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, மாவட்ட ரீதியில் விரிவுபடுத்துதல், வயதுக் கட்டமைப்பு, அங்கவீன நிலைமை, பொருளாதார நிலையினை இனங்காணுதல், உறுதியான, சரியான மற்றும் விளைத்திறனான தீர்மானத்தினை எடுப்பதற்கு அங்கவீனர் சமுதாயத்தின் தகவல்களினை உள்ளடக்கிய தரவுத் திட்டமொன்றினைத் தயாரித்தல் தொடர்பில் கடந்த வருடத்தின் கணக்காய்வு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டபோதிலும் அது தொடர்பில் போதுமான வினைத்திறனாக நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

(இ) நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை அமுலாக்குவதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல், மீள்விருத்தி செய்தல், பாதுகாத்தல் போன்ற பிரதான கடமைப் பொறுப்புக்கள் விளைத்திறனாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பில் மதிப்பீடு மற்றும் பின் தொடர் செயற்பாட்டிற்கு உரிய முறைகளினைத் திட்டமிட்டு அமுலாக்குவதன் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

2.3 பிற விடயங்கள்

(அ) 16/1743/711/030 என்ற இலக்க அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு வழங்கப்பட்டிருந்த அமைச்சரவை அங்கீகாரத்தின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களுக்கு வீடுகளினை நிர்மாணிப்பதற்கு நிதியுதவிகளினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்திற்கு நிதியினை வழங்குவதற்காக தேசிய லொத்தர் சபை முன்னெடுக்கும் "சுப்பிரி வாசனா சம்பத" லொத்தர் வருமானத்தில் நூற்றுக்கு 5 நிதி அறவீடு செய்யப்பட்டிருந்தது. அதன் வருமானத்தினை சரியாக மதிப்பீடு செய்தல் மற்றும் கணக்கிடுதல் இடம்பெற்று உண்மையான வருமானத்தினை அறவீடு செய்வதற்கு மற்றும் கணக்கிடுவதற்கு நடவடிக்கை எடுப்பதற்குப் பதிலாக பொதுத் திறைசேரியிடமிருந்து வழங்குவதற்கு இணங்கிய மற்றும் வழங்கியிருந்த நிதியினை அடிப்படையாகக் கொண்டு வருடத்தின் வருமானம் மற்றும் கிடைக்க வேண்டிய நிலுவை வருமானம் கணக்கிடப்பட்டிருந்தது.

(i) சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்திலிருந்து அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2021 திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 5,985,145 நிதியும் மற்றும் 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 90,012,050 நிதியும் வீடமைப்பு உதவியாக க் கிடைக்க வேண்டியிருந்தும், ரூபா. 13,400,000 நிதி பெறப்பட்டிருந்ததுடன், மீதி ரூபா. 82,597,195 நிலுவை வருமானமாகும். இக்காரணத்தினால் அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களினை சரியானவாறு எட்டப்படாமல் இருந்தது.

(ii) 2006 தொடக்கம் மீளாய்வு ஆண்டு வரை 19 மாவட்டங்களின் அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நிர்மாணிப்பினை நிறைவு செய்வதற்கு முன்னர் 111 நிறுத்தப்பட்ட வீடுகள் தொடர்பில் ரூபா. 9,632,261 செலவு ஈடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களினை சரியானவாறு நிறைவேற்றுவதற்கு முடியாது போயுள்ளது.

(ஆ) 2021 திசம்பர் 31 ஆந் திகதியன்றைய அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி மற்றும் உண்மையான பணியாட்தொகுதி தொடர்பிலான விவரங்கள் பின்வருமாறு.

பதவி	அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதி	உண்மையான பணியாட்தொகுதி	வெற்றிடங்கள்/ மேலதிக எண்ணிக்கை
சிரேஸ்ட நிலை	**6**	**5**	**1**
மூன்றாம் நிலை	**3**	**3**	**-**
இரண்டாம் நிலை	**25**	**42**	**(17)**
ஆரம்ப நிலை	**6**	**2**	**4**
மொத்தம்	**40**	**52**	

பின்வரும் விடயங்கள் அவதானிக்கப்பட்டுள்ளன.

(I) முகாமைத்துவச் சேவைகள் திணைக்களத்தினால் 2018 மார்ச் 19 ஆந் திகதி பணியாட்தொகுதியின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டபோதிலும், ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை.

(II) அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதிக்கு மேலாக அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு 27 பேர் ஆட்சேர்ப்புச் செய்யப்பட்டமை மேலதிகமாக அவதானிக்கப்பட்டுள்ளது. அரச கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்கள் ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருப்பின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினை திருத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவ்வாறு இடம்பெற்றிருக்கவில்லை.

(III) 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுக்காக்கும் சட்டத்தின் பிரகாரம் நியதிச்சட்ட நிறுவனமொன்றாக செயலகம் அமைக்கப்பட்டிருந்தபோதிலும் நேர் இராஜாங்க அமைச்சினதும், பிற திணைக்களங்களினதும் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளக ரீதியில் இணைப்புச் செய்யப்பட்டிருந்தனர். அவ்வாறு தேசிய செயலகத்தில் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு கடமையாற்றிய 24 உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 15,237,256 மகளிர், சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்டல் அமைச்சினாலும் மற்றும் மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 2,390,237 சமூக சேவைகள் திணைக்களத்தினாலும் 2022 ஆம் ஆண்டினுள் சம்பளம் வழங்கப்பட்டுள்ளது.

ஒப்பம்/டபிள்யு.பி.சி. விக்ரமரத்ன,

கணக்காய்வாளர் அதிபதி.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் 2022 திசம்பர் 31 ஆந் திகதியுடன் முடிவுற்ற வருடத்திற்கான நிதிக் கூற்றுக்களினை உள்ளடக்கிய அதன் செயற்பாடுகள் தொடர்பிலான 1971 ஆம் ஆண்டின் 38 ஆம் இலக்க நிதிச் சட்டத்தின் 13(7) (ஏ) பிரிவின் பிரகாரம் தவிசாளருக்கு முன்வைக்கப்படும் விரிவான கணக்காய்வாளர் அதிபதி அறிக்கை மற்றும் அது தொடர்பான பதில்கள்

1.5 (அ) **நிர்வாக சபையினால் மாதம் ஒரு முறையாவது கூட்டம் கூட வேண்டுமாயினும், 2022 ஆம் ஆண்டுக்கு 03 கூட்டங்கள் மாத்திரமே நடாத்தப்பட்டன.**

நாட்டில் ஏற்பட்டுள்ள அரசியல் மற்றும் எரிபொருள் நெருக்கடிகள் காரணமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபைக் கூட்டங்கள் 03 அமர்வுகளாக மட்டுப்படுத்தப்பட்டன. 12 உப குழுக் கூட்டங்கள் விரிவாக கலந்துரையாடப்பட வேண்டிய விடயங்களுக்காக அங்கத்தவர்களினை உள்ளடக்கி நடாத்தப்பட்டுள்ளதால், தேசிய சபைக் கூட்டங்களின் எண்ணிக்கை குறைந்துள்ளபோதிலும் அது பிரச்சினையாகவில்லை.

2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதமளவில் 05 நிர்வாக சபைக் கூட்டங்கள் மற்றும் 10 உப குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டன.

(ஆ) **மீளாய்வு ஆண்டில் தலைமைச் செயலகத்தின் செயற்திறன் அறிக்கை தயாரிக்கப்பட்டு நிதிநிலை அறிக்கைகளுடன் கணக்காய்வாளர் அதிபதிக்கு முன்வைக்கப்படுதல் வேண்டுமாயினும் அது சமர்ப்பிக்கப்படவில்லை.**

2022 ஆம் ஆண்டு அறிக்கை அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபைக்கு முன்வைத்து 2023.07.10 ஆந் திகதி சபையின் அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன்,. அது அமைச்சரவை அங்கீகாரத்திற்காக முன்வைக்கப்பட்டுள்ளது. அமைச்சரவை அங்கீகாரம் கிடைத்தவுடன் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்படும்.

சபையின் உறுப்பினர்கள் கூடி விவாதித்து முடிவுகளினை எடுப்பதற்கு ஏற்ற சூழல் இல்லாமையினால், சபையின் செயற்பாடுகளினை போதுமானளவில் நிறைவேற்றுவதற்கான வாய்ப்பு வழங்கப்படவில்லை. அது அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபையின் நோக்கங்களினை அடைவதை மோசமாகப் பாதித்துள்ளது.

2022 ஆம் ஆண்டில் நாட்டில் நிலவிய மோசமான சூழ்நிலை காரணமாக ஒருசில சபைக்கூட்டங்களுக்கு மட்டுப்படுத்தப்பட்டபோதிலும். தேசிய சபைக் கூட்டங்களுக்கு மேலதிகமாக 12 உப குழு சபைக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு அக்குழுக்களின் சிபாரிசுகள் நிர்வாக சபைக் கூட்டத்திற்கு முன்வைக்கப்பட்டு

தேவையான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. எனினும் 2023 ஆம் ஆண்டு ஆகஸ்டு மாதமளவில் 05 நிர்வாக சபைக் கூட்டங்கள் மற்றும் 10 உப குழுக் கூட்டங்கள் நடாத்தப்பட்டு தேசிய சபையின் நோக்கங்களினை எட்டுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

(ஆ) 2022 திசம்பர் 31 ஆந் திகதியன்று வழங்கப்பட்ட 06 மாதங்கள் கடந்து கொடுப்பனவுக்கு முன்வைக்கப்படாத ரூபா. 133,492 பெறுமதியினைக் கொண்ட காலாவதியான 14 காசோலைகள் தொடர்பில் நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

வங்கி நடப்புக் கணக்கின் 06 மாதங்ளுக்கும் மேலாக காலம் கடந்த 14 காசோலைகள் தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்பட்டு நிறைவு செய்யப்பட்டுள்ளது.
நிதிப் பிரமாணத்தின் பிரகாரம் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது

3.1 முகாமைத்துவ திறமையின்மை

(அ) **அங்கவீனமுற்ற நபர்களின் நலனை மேம்படுத்துதல், அவர்களின் உரிமைகளினைப் பாதுகாத்தல் மற்றும் மீள்விருத்தி செய்தல் தொடர்பில் அரசுக்கு ஆலோசனை வழங்குதல்.**

சைகை மொழிச் சட்ட வரைவு

2023.07.13 ஆந் திகதி சைகை மொழிச் சட்டத்தின் அமைச்சின் அவதானிப்புக்கள் சட்டவரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம்

அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் அடிப்படை வரைவு சட்ட வரைஞர் திணைக்களத்திற்கு அனுப்பப்பட்டு நீதி அமைச்சினூடாக இறுதி அவதானிப்புச் செயற்பாடுகளுக்கு மீளவும் அமைச்சுக்கு கையளிக்கப்பட்டுள்ளது. உரிமைகள் சட்டமூலத்தில் தயாரிக்கப்பட்ட அவதானிப்புக்கள் 2023.08.22 ஆந் திகதி நீதி அமைச்சுப் பிரிவுக்கு ஒப்படைக்கப்பட்டுள்ளது.

அங்கவீனமுற்ற நபர்களுக்கான பிரவேசிப்புக் கட்டளை வர்த்தமானி

பிரவேசிப்பு வசதிகள் வர்த்தமானி தொடர்பிலான அமைச்சுக்கள் வர்த்தமானி குழு, போக்குவரத்து அமைச்சு, சிவில் விமான சேவைகள் அமைச்சு மற்றும் நகர அபிவிருத்தி அதிகார சபையுடன் சில கலந்துரையாடல்களினை நடாத்தியுள்ளது. தற்போதைய நிலைப்பாடாக, பிரவேசிப்பு வசதிகள் வர்த்தமானி தொடர்பில் உரிய அமைச்சுக்கள் மற்றும் அதிகாரிகளுக்கு, அந்தந்த நிறுவனங்கள் தொடர்பில் உள்ளடக்கப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் நிறுவன மட்டத்தில் கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டு அவ்விடயங்களின் அவதானிப்புக்கள் மற்றும் முன்மொழிவுகளிருப்பின் முன்வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பான சர்வதேசப் பிரகடனங்கள் மற்றும் மரபுகள் அரசினால் ஏற்றுக்கொள்ளப்பட்டு பின்பற்றப்படுவதை உறுதி செய்தல்.

- சர்வதேச சாசனங்களின் பிரகாரம் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டம் வரைவு செய்யப்பட்டுள்ளது.
- இலங்கையினால் 2016 ஆண்டில் அங்கீகரிக்கப்பட்டுள்ள ஐக்கிய நாடுகளின் அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் உடன்படிக்கையின் பிரகாரம், முதலாவது அறிக்கை 2018 ஆம் ஆண்டில் ஐக்கிய நாடுகள் சபைக்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

(இ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலும் மற்றும் அவ்வாறான நபர்களுக்குக் கிடைக்கக்கூடிய சேவைகள் தொடர்பிலும் துல்லியமான புள்ளவிவரங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்..

அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் இணையத்தளம், முகநூல், whatsApp ஊடாக சகல சேவைகள் தொடர்பிலுமான விவரங்கள் உள்ளடக்கப்பட்டுள்ளன. சுவர்ணவாகினி அலைவரிசையில் பணிக்கூற்று தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

அரச நிறுவனங்களினூடாக ஒருங்கிணைப்புச் செய்யப்படும் கண்காட்சிகளில், அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தினால் இடம்பெறும் சேவைகள்

குறித்து அறிவிப்புப் பலகைகளினைக் காட்சிப்படுத்துதல், துண்டுப் பிரசுரங்களினைப் பகிந்தளிப்பதனூடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

நடமாடும் கூடாரங்களில், ஒவ்வொரு பிரதேச செயலகத்திலுமுள்ள சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினூடாக சேவைகள் தேவைப்படுபவர்களுக்கான தகவல்களினைப் பெற்றுக் கொள்ள முடியும்.

(ஈ) அங்கவீனங்களுக்கான பிரதான காரணங்களினைக் கண்டறிதல். அவற்றினைத் தடுப்பதற்கான மற்றும் கட்டுபடுத்துவதற்கான பயனுள்ள நடவடிக்கைகளினை ஊக்குவித்தல்.

அங்கவீனமுற்ற நபர்கள் மற்றும் நீண்டகாலமாக மருத்துவசாலைகளிலுள்ளவர்கள், மேலும் அங்கவீன நிலைக்கு உட்படுவதைத் தடுக்கும் நோக்குடன் மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டம் அமுலாக்கப்படுகிறது.

- மருத்துவ உதவி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக 2022 ஆம் ஆண்டில் 693 பயனாளிகளுக்கு ரூபா. 10.44 மில்லியன் உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது. 2023 யூலை 31 ஆந் திகதியளவில் 369 பேருக்கு ரூபா. 6.28 மில்லியன் உதவி நிதி வழங்கப்பட்டுள்ளது.

- 2022 ஆம் ஆண்டில் 13,956 பயனாளிகளுக்கு உதவிசார் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. (மூக்குக்கண்ணாடிகள், ஊன்றுகோல்கள்,. கையூன்று கோல்கள், சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்கள்). 2023 ஆம் ஆண்டின் யூலை 31 ஆந் திகதியளவில் 5807 பயனாளிகளுக்கு உதவிசார் உபகரணங்கள் வழங்கப்பட்டுள்ளது. (மூக்குக் கண்ணாடிகள், ஊன்றுகோல்கள், கையூன்றுகோல்கள், சக்கர நாற்காலிகள் போன்ற உபகரணங்கள்)

(உ) அங்கவீனமுற்ற நபர்களினைப் புனர்வாழ்வளிப்பதற்கு எடுக்கப்படவேண்டிய நடவடிக்கைகளினைத் தயாரித்து அவற்றினை ஊக்குவித்தல்.

06 பாதுகாப்பு இல்லங்களுக்கு அமைச்சரவை ,அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. உலக வங்கி உதவியின் கீழ் முன் பிள்ளைப்பருவ அபிவிருத்திச் செயற்திட்டத்தினூடாக அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ அபிவிருத்தி நிலையத்தினை அமைக்கும் செயற்பாடுகள் நிறைவு செய்யப்பட்டுள்ளன. அதற்குத் தேவையான

பணியாட்தொகுதியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டு வருவதுடன், தேவையான பொருட்களினை ADB செயற்திட்டத்தின் கீழ் 2023 ஆம் ஆண்டில் கொள்வனவு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. பணியாட்தொகுதியினை ஆட்சேர்ப்புச் செய்வதற்கு ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரத்திற்கு முன்வைப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. அதன் பிரகாரம் அக்குரஸ்ஸ நிலையத்தின் செயற்பாடுகளினை மிக விரைவில் ஆரம்பிப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளது. பிரத்தியேகப் பிரிவினூடாக முன்னெடுக்கப்பட்டுவரும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான பாதுகாக்கும் நிலையங்களினை பதிவு செய்து தேவையான கண்காணிப்புச் செயற்பாடுகளும் இடம்பெற்று வருகிறது.

(ஊ) அங்கவீனமுற்ற நபர்களுக்கான புனர்வாழ்வு நிலையங்களினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல்.

அக்குரஸ்ஸ முன்பிள்ளைப்பருவ அபிவிருத்தி நிலையத்தின் இரண்டாவது கட்டமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பு நிலையமொன்றினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு திட்டங்கள் தயாரிக்கப்பட்டுள்ளது. தற்போதைய பொருளாதார நெருக்கடிகளின் காரணமாக ஒதுக்கீடுகளினைப் பெற்றுக்கொள்ளுவதற்கு சிக்கலாகவுள்ளது.

(எ) அங்கவீனமுற்ற நபர்களுக்கு தங்குமிட வசதிகளினை வழங்கி அவர்களினைப் பாதுகாப்பதற்கு நிறுவனங்களினை அமைத்து முன்னெடுத்துச் செல்லுதல், அவ்வாறான நபர்களுக்கு கல்விசார் மற்றும் வாழ்க்கைத் தொழில் பயிற்சியினை வழங்குதல்.

06 பாதுகாப்பு நிலையங்களினை அமைத்ததன் பின்னர் அங்கவீனமுற்ற நபர்களுக்கு தங்குமிட வசதிகளினை வழங்கி பாதுகாத்தல் மற்றும் தேவையான பயிற்சிகளினை வழங்குவதும் முடியும். அக்குரஸ்ஸ முன்பிள்ளைப் பருவ நிலையத்தின் நிர்மாணிப்பு நிறைவு பெற்றுள்ளது. இரண்டாவது கட்டமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கு பாதுகாப்பு நிலையமொன்றினை முன்னெடுத்துச் செல்லுவதற்கு திட்டமிடப்பட்டுள்ளது. தற்போது சமூக சேவைகள் திணைக்களத்தின் 11 வாழ்க்கைத் தொழிற் பயிற்சி நிறுவனங்களினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கு வாழ்க்கைத் தொழிற் பயிற்சி வழங்கப்படுகிறது. சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக பெண்களுக்கு பட்டுகம்மன பாதுகாப்பு நிலையமொன்றும்,

ஆண்களுக்கு புவக்பிட்டிய பாதுகாப்பு நிலையமொன்றும் முன்னெடுக்கப்பட்டு வருகிறது.

(ஏ) அங்கவீனமுற்ற நபர்களுக்கு பிரவேசிக்கக்கூடிய பௌதிக சூழலினைத் தயாரிக்கும் வேலைத்திட்டத்தினை அறிமுகஞ்செய்தல், தகவல்களினைப் பெறுவதற்கும் மற்றும் தொடர்பாடாலுக்குமான பிரவேசிப்பு அங்கவீனமுற்ற நபர்களுக்கு பெற்றுக்கொள்ளக்கூடிய முன்மொழிவுத் திட்டங்களினை அமுலாக்குதல்.

விசேட வர்த்தமானி அறிவிப்பினூடாக 2006 ஆம் ஆண்டின் 01 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலான பிரவேசிப்புக் கட்டளை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளதுடன், சர்வதேச மட்டத்தின் நியமங்கள் மற்றும் விவரக் குறிப்புக்களின் பிரகாரம் பிரவேசிப்புக் கட்டளைகள் வர்த்தமானி திருத்தம் செய்யப்பட்டு தயாரிக்கும் செயற்பாடுகள் இதுவரை இடம்பெற்று வருகிறது. இது தொடர்பில் போக்குவரத்து அமைச்சு, சிவில் விமான சேவைகள் அமைச்சு, நகர அபிவிருத்தி அதிகார சபை மற்றும் வீதி அபிவிருத்தி அதிகார சபை போன்ற நிறுவனங்களுடன் தொடர்புபட்டு கலந்துரையாடர்கள் நடாத்தப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன்.

(ஐ) பிரசுரங்களினை வெளியிடுதல் மற்றும் பிற வேலை ஒழுங்குகளினூடாக அங்கவீனமுற்ற நபர்களின் நிலைமை மற்றும் தேவைகள் தொடர்பில் பொதுமக்களினை வழிப்புணர்வூட்டுதல்.

2022 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்டுள்ள 19 நடமாடும் சேவைகள் மற்றும் ஆயிரம் வலுவூட்டும் நிகழ்ச்சித் திட்டங்கள் 02 ஊடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். அலுவலக இணையப் பக்கத்தினூடாகவும், முகநூலிலும் மற்றும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்தின் கணக்கின் ஊடாகவும் பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். திசம்பர் 03 ஆந் திகதி நினைவுகூரும் அங்கவீனமுற்ற நபர்களுக்கான சர்வதேச அங்கவீனர் தினத்தினை ஒட்டி வானொலி மற்றும் தொலைக்காட்சி நிகழ்ச்சித் திட்டங்களினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

2023 ஆம் ஆண்டில் நடாத்தப்பட்ட 09 நடமாடும் சேவைகள், அலுவலக இணையப் பக்கத்தினூடாகவும் மற்றும் முக நூலின் அங்கவீனமுற்ற நபர்களின்

கணக்கினூடாகவும் பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர். மேலும் 2023 ஆம் ஆண்டில் ஜனவரி மாதத்தில் சுவர்ணவாகினி அலைவரிசையின் பணிக்கூற்று நிகழ்ச்சித் திட்டத்தினூடாக பொதுமக்கள் விழிப்புணர்வூட்டப்பட்டுள்ளனர்.

(ஒ) அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பிலும், அவ்வாறான நபர்கள் தொடர்பிலும் மற்றும் அவ்வாறான நபர்கள் பெற்றுக்கொள்ளக்கூடிய சேவைகள் தொடர்பிலும் துல்லியமான புள்ளி விவரங்களினை முன்னெடுத்துச் செல்லுதல்.

அங்கவீனமுற்ற நபர்கள் தொடர்பில் இடம்பெற்றுவரும் பல்வேறு நிகழ்ச்சித் திட்டங்கள் இணையப் பக்கம், முகநூல், தொலைக்காட்சி மற்றும் வானொலி நிகழ்ச்சித் திட்டங்களில் பொருத்தமான விழிப்புணர்வு மற்றும் விளம்பரச் செயற்பாடுகள் இடம்பெற்றுள்ளது. அதற்கு மேலாக சுய தொழில் உதவிகள், கல்வி உதவிகள், மருத்துவ உதவிகள், வீடமைப்பு உதவிகள் மற்றும் மாதாந்த வாழ்வாதார உதவிகளினை வழங்கி அங்கவீனமுற்ற நபர்களின் வாழ்க்கைத் தரத்தினை மேம்படுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

3.2 தொழிற்பாட்டுத் திறமையின்மை

(அ) (I) சுப்பிரி வாசனா சம்பத லொத்தர் வருமானத்தினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்திற்கு 2021 திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 5,985,145 நிதி மற்றும் 2022 திசம்பர் 31 ஆந் திகதியளவில் ரூபா. 90,012,050 நிதி, வீடமைப்பு உதவியாக கிடைக்க வேண்டுமாயினும் ரூபா. 13,400,000 நிதி மாத்திரம் பெறப்பட்டுள்ளதுடன், மீதி ரூபா. 82,597,195 நிலுவையான வருமானங்களாகும்., இதன் காரணமாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்களினை சரியானவாறு அடையவதற்கு முடியாதிருந்தது.

கணக்காய்வின் பின்னர் தேசிய லொத்தர் சபையிடமிருந்து கிடைக்க வேண்டிய வருமானம் தொடர்பில் எழுத்து மூலம் தகவல்கள் பெறப்பட்டிருந்தது. தேசிய லொத்தர் சபையின் பொதுமுகாமையாளரின் NLB/FIN/OF/03/02/ii என்ற இலக்க 2023 மார்ச் 28 ஆந் திகதிய கடிதத்தினூடாக பெறப்பட்டிருந்த தகவல்களின் பிரகாரம் பொதுத் திறைசேரியினால் வழங்குவதற்கு உடன்பட்டிருந்த வழங்கப்பட்டிருந்த நிதி சரியானது என உறுதிப்படுத்தப்பட்டுள்ளது.

(ii) அதேபோல 2006 தொடக்கம் மீளாய்வு ஆண்டு வரை 19 மாவட்டங்களில் அங்கவீனமுற்ற நபர்களுக்கான வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நிர்மாணிப்பு நிறைவடைவதற்கு முன்னர் நிறுத்தப்பட்டிருந்த 111 வீடுகள் தொடர்பில் ரூபா. 9,632,261 செலவு ஈடு செய்யப்பட்டிருந்தது. இதன் காரணமாக வீடமைப்பு உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கத்தினை சரியானவாறு எட்டுவதற்கு முடியாதிருந்தது.

வீடமைப்பு உதவியினை வழங்கும் நிகழ்ச்சித் திட்டத்தின்போது 2006 ஆம் ஆண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரை பின்வருமாறு உதவியினை வழங்கிக் கொண்டிருந்தவேளையில் உதவிகளினைப் பெறுவதற்கு தகைமையினைக் கொண்டிராத காரணத்தினால் உதவி வழங்குவதை இடைநடுவே நிறுத்துவதற்கு நேரிட்டது. அக்கொடுப்பனவுகள் இடைநடுவே நிறுத்தப்பட்டிருந்த பயனாளிகளின் எண்ணிக்கை (111) மொத்தப் பயனாளிகளில் (3891) 2.8% ஆகும்.

காரணம்	பயனாளிகளின் எண்ணிக்கை
பயனாளிகள் மரணித்தல்	39
பயனாளிகள் வதிவிடத்தினை விட்டுச் செல்லுதல்	17
காணி தகராறுகள்	04
பெற்றோர்கள்/பாதுகாப்பு இல்லாதுபோகுதல்	04
நிர்மாணிப்புக்கள் நிராகரிப்பு	17
பிற உதவி கிடைத்தல்	13
வீடுகளினை விற்றல்	03
அநர்த்தங்களுக்கு உட்படுதல்	02
நோய் நிலைமைகளின் அதிகரிப்பு காரணமாக நிர்மாணிப்பு நிறுத்தப்படுதல்	01
வருமான அதிகரிப்பு	09
அங்கவீனம் குணமடைதல்	01
நிலச் சரிவுகள்	01

எவ்வாறாயினும் இந்நிகழ்ச்சித் திட்டம் மிகவும் வெற்றிகரமான நிகழ்ச்சித் திட்டமொன்றாகும் என்பதுடன் இதுவரையில் 3891 வீடுகளுக்கு உதவிகள் வழங்கப்பட்டு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கங்கள் சரியானவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதை தயவுடன் அறியத் தருகின்றேன். சில சந்தர்ப்பங்களில் உதவித் தொகையின் பாகம் கிடைத்த பின்னர் பிறரிடமிருந்து

உதவி கிடைத்தமையினால் சில அங்கவீனர்களின் வீடுகள் வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டுள்ளது. அவ் வேளையில் வீடமைப்பு உதவியின் மீதிப் பாகங்களினை வழங்கும் தேவைப்பாடு எழாமையினால் உதவி நிதியின் மீதிப் பாகத்தினை வழங்குவது நிறுத்தப்பட்டுள்ளது. ஆதலால் பிற உதவிக் கிடைப்பனவினூடாக வீடமைப்பு நிகழ்ச்சித் திட்டத்தின் நோக்கம் சரியானவாறு நிறைவேற்றப்பட்டுள்ளது என்பதைத் தயவுடன் அறியத் தருகின்றேன். வழங்கப்படும் உதவித்தொகை வீடொன்றினை முழுமையாக நிர்மாணிப்பதற்கு போதுமானதல்ல என்பதால் பிற உதவிகள் பெறப்படுதல் வேண்டும் என்பதை மேலும் அறியத் தருகின்றேன். மீதிப் பணத்தினைப் பெறுவதற்கு 2023.04.30 ஆந் திகதி மற்றும் 2023.08.31 ஆகிய தினங்களின் கடிதங்களினூடாக திறைசேரி திணைக்களத்தற்கு வேண்டுகோள் செய்யப்பட்டுள்ளது.

(ஆ) அங்கவீனமுற்ற நபர்களுக்கு சம வாய்ப்புக்களினை வழங்குதல், வலுவூட்டுதல், நலன்புரி மற்றும் நல்லெண்ணத்திற்கான நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்கள் தேசிய மட்டத்தில் வெளிப்படைத்தன்மையுடனும் மற்றும் முறைசார் வகையிலும் பயன்களினை சமத்துவத்துடன் வழங்குவதற்கு இலகுவான வகையில் செயலாக்குவதற்குப் பதிலாக அங்கவீனமுற்ற நபர்களின் எண்ணிக்கை, மாவட்டம் என்ற ரீதியில் பங்கீடு, வயதுக் கட்டமைப்பு, அங்கவீன நில பொருளாதார நிலையினை அடையாளம் காணுதல், துல்லியமான, சரியான மற்றும் விளைத்திறனான தீர்மானங்களினை எடுப்பதற்கு அங்கவீனமுற்ற சமுதாயத்தின் தகவல்களினை உள்ளடக்கிய தரவுத் திட்டமொன்றினை தயாரித்தல் தொடர்பில் கடந்த வருடத்தின் கணக்காய்வு அறிக்கையில் எடுத்துக்காட்டப்பட்டபோதிலும் அது தொடர்பில் போதுமானவாறு வினைத்திறனான நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை.

சமூகப் பயன் சபையினூடாக திரட்டப்படும் தரவுகளினைப் பெற்றுக் கொள்ளுவதற்கும், சமூக சேவைகள் திணைக்களத்தினூடாக தயாரிக்கப்படும் தரவுத் திட்டத்தினூடாக இத்தரவுகளினை திரட்டுவதற்கும் நடவடிக்கை எடுப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

புள்ளி விவரத் திணைக்களத்துடன் தேவையான தரவுகளினைத திரட்டுவதற்கு கலந்துரையாடல்கள் நடாத்தப்பட்டுள்ளதுடன் 2023 ஆம் ஆண்டில் கணக்கெடுப்பதற்கு உத்தேசிக்கப்பட்டுள்ளதால் அதனூடாக போதிய

தரவுகளினைப் பெற்றுக் கொள்ள முடியும் எனவும் கலந்துரையாடலில் குறிப்பிடப்பட்டுள்ளது.

(இ) நிகழ்ச்சித் திட்டங்கள் மற்றும் செயற்திட்டங்களினை அமுலாக்கியதனூடாக அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினை மேம்படுத்துதல், மீள்விருத்தி செய்தல் மற்றும் பாதுகாத்தல் போன்ற பிரதான கடமைப் பொறுப்புக்கள் விளைத்திறனாக நிறைவேற்றப்பட்டுள்ளதா என்பது தொடர்பிலான மதிப்பீடு மற்றும் பின்தொடர்தல் தொடர்பான நடைமுறைகளினை திட்டமிட்டு செயற்படுத்துதல் மீது கவனம் செலுத்தப்பட்டிருக்கவில்லை.

சகல உதவி நிகழ்ச்சித் திட்டங்கள் தொடர்பிலான பின்தொடர்தல் உரிய பிரதேச செயலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தர்/அபிவிருத்தி உத்தியோகத்தரிளால் (சமூக சேவைகள்) இடம்பெற்று வருகிறது. பிரதேச செயலாளர்கள், மாவட்ட செயலாளர்கள் மற்றும் மாவட்ட சமூக சேவைகள் உத்தியோகத்தரினால் அச்செயற்பாடுகள் கண்காணிப்புச் செய்யப்படுகிறது. பின்தொடர்தல் அறிக்கைகள் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களினூடாக அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திற்கு வரவழைக்கப்பட்டு வருவதுடன் அவை மதிப்பீடு செய்யப்படுகிறது.

3.3. நிதி குறைவாகப் பயன்படுத்துதல்

நிதியம் தொடர்பில் கிடைக்கும் அரசின் முக்கிய பயன்பாட்டின் பின்னர் மீதமாகும் மேலதிக காசு மீதி மீளாய்வு ஆண்டின் திசம்பர் 31 ஆந் திகதியன்று ரூபா. 9,834,598 என காணப்பட்டதுடன், கடந்த 4 வருடங்களினுள் அது, ரூபா. 5,170,082 தொடக்கம் ரூபா. 12,062,703 வரையான இடைவெளியினைக் கொண்ட காசு மீதி வங்கி நடைமுறைக் கணக்கில் தேக்கி வைக்கப்பட்டிருந்தது. 1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் 19 வது பிரிவின் பிரகாரம் சபைக்கு உரித்தான நிதி சபையினால் உறுதிப்படுத்தப்பட்ட முறைமைக்கு முதலீடு செய்யப்பட்டபோதிலும் கடந்த 05 வருடக் காலப்பகுதியினுள் அவ்வாறு முதலீடு செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருக்கவில்லை. இம்மேலதிக நிதி முதலீடு செய்யப்படாமையின் காரணமாக 2018 ஆம் அண்டு தொடக்கம் 2022 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியினுள் நிதியத்திற்கு இல்லாது போயுள்ள வட்டி வருமானம் அண்ணளவாக ரூபா. 4,300,000 என அவதானிக்கப்பட்டது.

2023 திசம்பர் 23 ஆந் திகதி நடைபெற்ற கணக்காய்வு மற்றும் முகாமைத்துவக் கூட்டத்தில் லேதிக நிதியினை முதலீடு செய்தல் பொருத்தமானது என பரிந்துரைக்கப்பட்டுள்ளது. அப்பரிந்துரை 2023 பெப்ரவ**ரி** 16 ஆந் திகதி நடைபெற்ற அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய சபைக்கு முன்வைக்கப்பட்டது. அதில் தீர்மானிக்கப்பட்டவாறு பத்தரமுல்ல, இலங்கை வங்கிக் கிளையில் (உயர் வகுப்பு) 5 மில்லியன் 400 நாட்களுக்கு 25% வருடாந்த வட்டி விகிதாசாரத்திற்கும் மற்றும் 2 மில்லியன் 03 மாதங்களுக்கு 24% வருடாந்த வட்டி விகிதாசாரத்திற்கும் என நிலையான வைப்பு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

3.4 பிற அமைப்புக்களின் வளங்களினைப் பயன்படுத்துதல்

1996 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க அங்கவீனமுற்ற நபர்களின் உரிமைகளினைப் பாதுகாக்கும் சட்டத்தின் பிரகாரம் நிதியச்சட்ட நிறுவனமொன்றாக செயலகம் அமைக்கப்பட்ட வேளையில் நேர் இராஜாங்க அமைச்சின், பிற திணைக்களங்களின் உத்தியோகத்தர்கள் மற்றும் ஊழியர்கள் உள்ளக ரீதியில் இணைப்புச் செய்தல் இடம்பெற்றிருந்தது. அதில் தேசிய செயலகத்தின் கடமையில் ஈடுபடுத்தப்பட்டு கடமையாற்றிய 24 உத்தியோகத்தர்கள் தொடர்பில் ரூபா. 15,237,256 வரை, மகளிர். சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுவூட்'டல் அமைச்சினாலும், மூன்று உத்தியோகத்தர்களுக்கு ரூபா. 2,390,237 சமூக சேவைகள் திணைக்களத்தினாலும் 2022 ஆம் ஆண்டில் சம்பளம் வழங்கப்பட்டிருந்தது.

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தின் DMS/B1/41/03 என்ற இலக்க 2022 ஆகஸ்டு 08 ஆந் திகதிய கடிதத்தினூடாக சமூக சேவைகள் உத்தியோகத்தர்கள் மூன்று பேரினை இணைப்புச் செய்வதற்கு அங்கீகாரம் பெறப்பட்டுள்ளதுடன், அவர்களின் சேவையினை விளைத்திறனாகப் பெறுவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (சகல பிரதேச செயலகங்கள், மாவட்ட செயலகங்களின் சமூக சேவைகள் உத்தியோகத்தர்களின் ஒருங்கிணைப்புச் செயற்பாடுகள், வாழ்வாதார உதவிக் கொடுப்பனவுகள் உட்பட சகல கொடுப்புனவுகளினை வழங்கும்போது பரிட்சித்து பரிந்துரைகளினை வழங்குதல் போன்ற செயற்பாடுகள் இடம்பெற்று வருகிறது)

வேலையற்ற பட்டதாரிகளினை வேலைக்கமர்த்துதல் – 2020 இன் கீழ் அங்கவீனமுற்ற

நபர்களுக்கான தேசிய செயலகத்திற்கு பட்டதாரிப் பயிலுனல்கள் 28 பேர் முன்வைக்கப்பட்டுள்ளனர். 04 பட்டதாரிப் பயிலுனர்கள் அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகத்திறன் தலைமை அலுவலகத்திற்கு இணைப்புச் செய்யப்பட்டுள்ளதுடன் மீதமான 24 பேர் மாவட்ட செயலகங்களுக்கு இணைப்புச் செய்யப்பட்டனர்.

3.5. மனித வள முகாமைத்துவம்

முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்தினால் 2018 மார்ச் மாதம் 19 ஆந் திகதி பணியாட்தொகுதியின் பதவிகள் அங்கீகரிக்கப்பட்டபோதிலும் ஆட்சேர்ப்புத் திட்டம் தயாரிக்கப்பட்டு அங்கீகாரம் பெறப்பட்டிருக்கவில்லை,

தொழில்நுட்ப உத்தியோகத்தர் பதவிகள் மற்றும் சைகை மொழிபெயர்ப்பாளர் பதவிக்கு தயாரிக்கப்பட்ட ஆட்சேர்ப்புத் திட்டத்திற்கு தாபனப் பணிப்பாளர் நாயகத்தின் திருத்தங்களின் கீழ் அங்கீகரிக்கப்பட்டுள்ளது. ஆட்சேர்ப்புத் திட்டத்தினை அங்கீகரிப்பதற்கு அரசாங்க சேவைகள் ஆணைக்குழுவுக்கு முன்வைப்பதற்கு தயாரிக்கப்பட்டுள்ளது.

(ஆ) அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதிக்கு வெளியே அபிவிருத்தி உத்தியோகத்தர் பதவிகளுக்கு ஆட்சேர்ப்புச் செய்யப்பட்ட 27 பேரின் மேலதிகம் அவதானிக்கப்பட்டுள்ளது. அரசின் கொள்கைகள் மற்றும் தீர்மானங்களின் கீழ் அபிவிருத்தி உத்தியோகத்தர்களின் ஆட்சேர்ப்பு இடம்பெற்றிருப்பின் அங்கீகரிக்கப்பட்ட பணியாட் தொகுதியினை திருத்தம் செய்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டிருந்தபோதிலும் அவ்வாறு செய்யப்பட்டிருக்கவில்லை.

அங்கீகரிக்கப்பட்ட பணியாட்தொகுதியினை திருத்துவது தொடர்பிலான அங்கீகாரத்தினைப் பெறுவதற்கு தயாரிக்கப்பட்ட கடிதம், 2023.05.09 ஆந் திகதி நிர்வாகப் பிரிவுக்கு முன்வைக்கப்பட்டதன் பின்னர் நிர்வாகப் பிரிவினூடாக முகாமைத்துவ சேவைகள் திணைக்களத்திற்கு முன்வைக்கப்பட்டுள்ளது.

ஒப்பம்/ஜயமாலி சீ. விக்ரமஆரச்சி,
பணிப்பாளர்
அங்கவீனமுற்ற நபர்களுக்கான தேசிய செயலகம்